# கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் தீ! ரூ. 1 லட்சம் சேதம்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

தபால் பெட்டி எண் 49
போன்: 389
National Tamil Daily
மலர் 11
இதழ்: 207
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப்பதிப்பு மாத்திரம்
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் ஆவணி 22 ஜ: ஆகிர் 24 ஞாயிற்றுக்கிழமை [7-9-69]


கொழும்பு, ஞாயிறு

மருதானையிலுள்ள இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி நேற்று அதிகாலை நான்கு மணி நேரம் தீப்பிடித்து எரிந்தது. இந்தத்தீவிபத்தில் 1 லட்சம் ரூபாய் பெறுமதியான சாமான்கள் சேதமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்பக்கல்லூரியின் ஒரு பகுதி முற்றாகச் சேதமடைந்துள்ளது. மின் கோளாறினால் இத்தீவிபத்து ஏற்பட்டிருக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

தீயணைக்கும் படையினர் பெரும் பாடுபட்டு நெருப்பை அணைத்தனர்.

உடனடியாக நெருப்பணைக்கும் படையினருக்குத் தகவல் தெரிவித்திருந்தால் இவ்வித சேதம் ஏற்பட்டிருக்கமாட்டாதென கொழும்பு நகர தீயணைக்கும்படை முதல்வர் திரு ஜி டபிள்யூ டி சில்வா தெரிவித்தார்.

## டாக்டர்கள் பற்றி ஒரு புள்ளிவிபரம்

கொழும்பு, சனி

சென்ற வருடத்தில் இரு பல்கலைக்கழகங்களிலிருந்து சித்தி பெற்று வெளியேறிய டாக்டர்களில் 26 பேருக்கு மட்டும் வேலை வழங்கப்படவில்லை என்று இன்று ஆட்சிமன்றத்தில் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வருடத்தில் இரு பல்கலைக்கழகங்களிலிருந்தும் டாக்டர்களாக வெளியேறவிருக்கும் 172 பேரில் 162 பேர் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 145 பேருக்குவேலை வழங்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

## 41 வருடங்களுக்குப் பின் ஜீவனும்சம் கோருகிறார்

உடுகம, சனி

60 வயதுப் பெண் ஒருவர் 41 வருடங்களுக்குப் பின்னர் தனது கணவரிடம் ஜீவனுசம் கோரி வழக்காடினார்.

இப்பெண் தனது வழக்கறிஞர் மூலம் காலி மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி திரு. ஜி. எச். எல் வீரசேகரா முன்னிலையில் ஜீவனும்சம் கோரியுள்ளார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட பெண்ணை சருக்கலிங்கி எட்டின் என்பவர் கோர்ட்டில் வாக்குமூலமளிக்கையில் 1926ம் ஆண்டு தான் அப்புசிங்ஞோ என்பவரை விவாகம் செய்ததாகவும், அவர், தனக்கு ஒரு மகன் பிறந்த பின்னர் தன்னைக் கவனியாது விட்டுச் சென்றதாகவும் தெரிவித்தார். மேலும் இப்பெண் தன் கணவர் 500 ரூபா உழைப்பதாகவும் அதில் 200 ரூபா ஜீவனும்சம்பெற்றுத் தரும்படியும் கோரினார். இவ்வழக்கு விசாரணை அடுத்த மாதம்வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாண சுங்க கந்தோரில் நள்ளிரவில் துணிகர கொள்ளை

## சுழல் துப்பாக்கிகளுடன் வந்த மூவரை பொலிஸார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**நள்ளிரவு நேரம் சுழல் துப்பாக்கிகள் சகிதம் யாழ்ப்பாணம் சுங்க பகுதி கந்தோருக்குள் புகுந்த பயங்கர கொள்ளைக் கோஷ்டியொன்று. அங்கு மேல்நாட்டுப் பாணியில் நடாத்திய மிகப்பெரிய கொள்ளையொன்று வடபகுதிப் பொலிஸாரையும், சுங்க இலாகா அதிகாரிகளையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சுங்க இலாகாவுக்குச் சொந்தமான 'ஜீப்' வண்டி ஒன்றிலேயே இவர்கள் நடத்திய கொள்ளையில், சுங்க இலாகா களஞ்சிய அறையிலிருந்த பல லட்சக் கணக்கான ரூபா பெறுமதிவாய்ந்த விலையுயர்ந்த பொருட்கள் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

நேற்று நள்ளிரவுக்கும் அதிகாலைக்குமிடையே இக் கொள்ளை யாழ்ப்பாணம் கடற்கரை வீதியிலுள்ள வடபகுதி சுங்க இலாகா தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றதாம்.

கையில் றிவால்வருடன் சுங்க இலாகாவுக்கு வந்த ... ளையை நடாத்தியதாக பொலிஸ் விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

[illegible]வி பொலிஸ் சுப்பிரின்டன் ஜனாப் எஸ். ஐ. அசீஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்ட[illegible] கம் [illegible] யில் உடனடியாக ஸ்தலத் ... முள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஜீப் வண்டியை எங்கு கண்டாலும் உடனடியாக அ[illegible]மையிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொள்ளை நடை[illegible]

## 'பகைமையையொழித்துஉரிமை கோரும் உணர்வேற்படுத்துவது'

மட்டுவில், சனி

'நாம் நமது நாடு நமது மொழி நமது சமுதாயம் என்ற உரிமைப்பண்புகளை நமது மத்தியில் வளர்க்கவும் பகைமையை ஒழித்து உரிமை கோடும் உணர்வோடு எமது சமுதாய உயர்விற்கு உழைக்கவும் வழிகோலுவது சிரமதான இயக்கம் ஒன்றுதான்''

இவ்வாறு, வரணி வாலிபர் சிரமதான இயக்கத்திற் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார்.

தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதான இயக்கத்தில் உசன் மகாவித்தியாலய அதிபர் திரு செ சிவப்பிரகாசம், முத்தமிழ் வித்தகர் அ பொ செல் ...

நமது மக்களின் மத்தியில் நிலவும் பகைமை ஒழியவும் பரஸ்பர அன்பும், பண்பும் செழிக்கவும் வேண்டும்.

மக்கள்மத்தியில் பகைமை ஒழிந்து அன்பு உள்ளம் பிறந்தபின்புதான் ஒன்றுபட்ட ஒருசமுதாயம் உருவாக முடியும். அப்படியானசமுதாயத்தினுல் தான் நமது இனப், மொழி, கலை கலாச்சாரம் அதன் உரிமைகள் என்ன என்ற கேள்விக்கு விடைகாண முடியும் தமிழன் சரித்திரத்தில் மிகவும் பழமைப்பண்பு பெற்ற இச்சிரமதான இயக்கம் எமது வாலிபர்களையும் மக்களையும் சுயமரியாதை, தன் நம்பிக்கையுடன் கிராம நலனுக்காக அயராது உழைக்க வைக்கும் ஒரு கருவியாக அமைகிறது.

கிரம அபிவிருத்தித் தலைவர் திரு முத்துவேலு பேசுகையில் தமிழன் அன்று ...

## 'பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றோரும் கைகொடுக்க வேண்டும்'

### உப சபாநாயகர்

புலோலி, சனி

அரசாங்கம் பாடசாலைகளை பொறுப்பேற்று விட்டது. ஆதலால் அப் பாடசாலைக்குத் தேவையான எல்லாவற்றையும் அரசாங்கம்தான் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தைக் கைவிட்டு நம்பாடசாலைகள் வளர்ச்சியடைய பெற்றோர்கள் கைகொடுத்துதவவேண்டும்'

மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாசாலைப் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் தலைமை வகித்துப் பேசிய உபசபாநாயகர் திரு எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் ஆறுமுக நாவலர் காட்டிய வழியில் இப்பாடசாலை சைவத்தையும் தமிழையும் வளர்த்து வருகிறது. இங்கு ஆரம்பக் கல்வி திறமையாகவுள்ளதால்தான் இங்கு கற்ற மாணவர்கள் இப் பகுதியிலுள்ள உயர்தர பாடசாலைகளில் திறமையாகச் சித்தியடைகிறார்கள். எனவே அரசாங்கம் பாடசாலைகளுக்கு உதவி செய்யுமென நம்பியிருந்தால் பாடசாலை வளர்ச்சியடையாது. பெற்றோர்கள் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களே பாடசாலை வளர்ச்சியில் கூடிய கவனம் செலுத்தவேண்டும் எனக் கூறினார்.

இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாநிலகல்வி அதிகாரி திரு சி. தணிகாசலம் உரையாற்றுகையில் கூறியதாவது;

'இதுபோன்ற ஆரம்ப பாடசாலைகளில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள் இருப்பதால் கல்வித்தரம் பாதிக்கப்படாமல் இருக்கிறது. வடபகுதியில் உள்ள எல்லாப்பாடசாலைகளையும் நாங்க கவனிக்கவேண்டியுள்ளதால் குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு சலுகைகாட்ட முடியாது. நாவலர் காட்டிய வழியில் சைவத்தையும் தமிழையும் இப் பாடசாலைவளர்க்கிறது.'

நன்றியுரை கூறிய பெற்றோர் ஆசிரியர் சங்க காரியதரிசி திரு. ராஜ் சுப்பிரமணியம் இப் பகுதியிலுள்ள பெண்கள் பாடசாலைக்கும் ஒருபுதிய கட்டிடமொன்றை நிறுவித்தரவேண்டுமென்று உபசபாநாயகரிடம் ஒரு ...

## உலகச் செய்திகள்

செப்டம்பர்-6

கலிபோர்னியா

காலஞ்சென்ற வடவியட்னும் அதிபர் டாக்டர் ஹோ-சி-மின்னுக்கு அனுதாபம் தெரிவித்து 2,000 இளைஞர்கள் இன்று கலிபோர்னியா தெருக்களில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்கள் பூங்காவன மொன்றுக்குள் நுழைந்துஅந்தப்பூங்காவுக்கு ஹோ-சி-மின் எனப் பெயர் சூட்டினர்கள்

### இந்திரா அனுதாபம்

புதுடில்லி-

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி டில்லியிலுள்ள வடவியட்னும் தூதரகத்துக்குச் சென்று அங்குள்ள புத்தகத்தில் 'ஹோ'வின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வாசகமொன்றை எழுதிக் கையெழுத்திட்டார்.

### முக்கியமானபேச்சு

புதுடில்லி-

'ரஷ்யப் பிரதமர் கொஸிஜினுடன் இன்று நான்நடத்திய 1மணிநேரப் பேச்சு வார்த்தை முக்கியம் வாய்ந்தது; பயனுள்ளது' என்றுஇந்தியப்பிரதமர் ஸ்ரீமதி இந்திரா தெரிவித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதான இயக்கத்தில் உசன் மகாவித்தியாலய அதிபர் திரு செ சிவப்பிரகாசம், முத்தமிழ் வித்தகர் அ பொ செல்லையா, முன்னுள் வரணி கிராமசபைத்தலைவர் திரு ஆறுமுகம்உட்படப்பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். திரு நவரத்தினம் தொடர்ந்து பேசியதாவது

னுக்காக அயராது உழைக்க வைக்கும் ஒரு கருவியாக அமைகிறது.

கிராம அபிவிருத்தித் தலைவர் திரு முத்துவேலு பேசுகையில் தமிழன் அன்று தொட்டு இன்றுவரை பல பல முக்கிய கருமங்களுக்கெல்லாம் சிரமதான இயக்கத்தையே கையாண்டு வந்திருக்கின்ருன் என்பது உலகறிந்த உண்மை என்ருர்

வடபகுதி சுங்க இலாகா தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றதாம்.

கையில் றிவால்வருடன் சுங்க இலாகாவுக்கு வந்த மூவர் அங்கு 'கார்ட்'டாகக் கடமையாற்றிய பொன்சகோ என்பவரைக் கயிற்ருல் கட்டிவைத்து, வாய்க்குள் துணிகளையும் அடைத்து விட்டு இக் கொள்

டன் ஜஞப் எஸ். ஐ. அசீஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் ஆகியோர் தலைமையில் உடனடியாக ஸ்தலத்து[...] விரைந்து சென்ற பொலிஸ் கோஷ்டியினர் நேற்று மாலைவரை யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதும் இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டபோதும், சந்தேக நபர்களோ, அல்லது களவு போன பொருட்களோ எதுவும் அகப்படவில்லை.

களஞ்சிய அறையிலிருந்த கள்ளக்கடத்தல் விலையுயர்ந்த பொருட்களை சுங்க இலாகாவுக்குச் சொந்தமான 5ஸ்ரீ1521 வெள்ளை நிறமுள்ள 1 வில்லிஸ் 'ஜீப்' வண்டியிலேயே கொள்ளைக கோஷ்டியினர் கடத்திச் சென்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இத்தகவல் நாடுபூராவு

லும் உடனடியாக அ[...] யிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்குமாறு பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கொள்ளை நடை[...]ற்ற இடத்தைவடபகுதிபொ[...]ிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக் காலை நேரில் சென்று பார்வையிட்டதோடு, சுங்க இலாகா உதவி கலக்டர் திரு. செனிவரத்தினவுடன் இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

களவுபோன பொருட்களின் தொகை இன்னமும் மதிப்பிடப்படவில்லை. கைவிரல் அடையாளங்களைப்பரிசோதிக்க கைவிரல் அடையாள நிபுணர்கள் கொழும்பிலிருந்து அழைக்கப்பட்டுள்ளனர். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. (கா நி)

களில் திறமையாகச் சித்தியடைகிருர்கள். எனவே அரசாங்கம் பாடசாலைகளுக்கு உதவி செய்யுமென நம்பியிருந்தால் பாடசாலை வளர்

யம் இப் பகுதியிலுள்ள பெண்கள் பாடசாலைக்கும் ஒருபுதிய கட்டிடமொன்றை நிறுவித்தரவேண்டு மென்று உபசபாநாயகரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

ஜினுடன் இன்று நான்நடத்திய 1மணிநேரப் பேச்சுவார்த்தை முக்கியம் வாய்ந்தது; பயனுள்ளது' என்றுஇந்தியப்பிரதமர் ஸ்ரீமதி இந்திரா தெரிவித்தார்.

வட பகுதி அசைஸ் விசாரணை

# "முதலாம் இரண்டாம் எதிரிகள் கத்தியை ஓங்கிக்கொண்டிருந்தார்கள்"

## நாவற்குழி கொலைவழக்கில் சீவல்தொழிலாளி சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

1-ம் எதிரி பூபாலசிங்கமும், 2-ம் எதிரி தம்பிமுத்துவும் வைரமுத்துவை வெட்ட கத்தியை ஓங்கினுர்கள். இருவர் கையிலும் கத்திகள் இருந்தன. நான் சம்பவத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன் முதலில் பார்க்குப்போது கத்தியை ஓங்கிக்கொண்டிருந்தார்கள். எதிரிகள் வெட்டப் போனபோது இறந்தவர் கையால் தடை செய்து கொண்டிருந்தார்.

நாவற்குழி கொலை வழக்கில் சாட்சியமளித்த சீவல் தொழிலாளியான ஐ. செல்லத்துரை மேற்கண்டவாறு கூறினுர். இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஓ. எல். டி. கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் நாவற்குழியில் 68-ம் ஆண்டு ஜூலை 7-ந் திகதி நன்னி பூபாலசிங்கம், நன்னி தம்பிமுத்து ஆகியோர் சின்னர் வைரமுத்து என்பவரைக் சொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

2-ம் எதிரி சாபில் அட்வக்கேட் ரி. வி. ராஜரத்தினம், அட்வக்கேட் எஸ். தேவசகாயத்தின் உதவியுடனும், பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடனும் ஆஜராஞர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் வி. உலகநாதன் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வக்கேட் பிரியாந்த பெரேரா ஆஜராஞர்.

விசாரணையைப் பார்ப்பதற்காக கோர்ட்டின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமானேர் திரண்டிருந்தனர்

செல்லத்துரை சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

எதிரிகள் இருவரையும் எனக்குத் தெரியும். இறந்தவரையும் தெரியும் இறந்தவர் எனது கிட்டியச் சொந்தக்காரரல்ல. சம்பவம் நடந்த தினம் காலை நான் வீட்டிலிருந்து கள்ளுச் சீவப் புறப்பட்டுச் சென்றேன் காலை 9-30 மணிக்கு வீட்டிற்கு கிட்ட ஒரு வளவிற்குச் சென்றேன். அங்கு சீவிவிட்டு மற்ற மரத்திற்குச் சீவப் போனேன். இரு எதிரிகளும் கையில் கத்தி வைத்திருப்பதைக் கண்டேன். எனது பார்வையைத் தடை செய்ய எதுவும் இருக்கவில்லை. சம்பவத்தைக் கண்டதும் நான் ஓடினேன். இறந்தவரின் மனைவியிடம் சம்பவத்தைச் சொல்லப்போனேன். அவரைச் சந்திக்கவில்லை. பின் வீட்டிற்குப் போனேன். இறந்தவரின் மருமகனுக்கு அறிவிக்க வாசிகசாலைக்குப் போனேன். அங்கு சீனிவாசகத்திற்கும், இராசையாவிற்கும் சொன்னேன். அவர்களுக்கு நடந்த சம்பவத்தை சொல்லிவிட்டு வீட்டிற்குப் போனேன். சீனிவாசகமும், இராசையாவும் சம்பவம் நடந்த இடத்தை நோக்கி ஓடினுர்கள். 1-ம் எதிரி தகப்பன் வீட்டில் இருப்பார். 2 ம் எதிரி தகப்பன் வீட்டிலும் மனைவி வீட்டிலும் இருப்பார்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

# 'சிறுநீர்ப்பாசன திட்டம் வடபகுதியில் விரைவில் செயல கும்'

மட்டுவில், சனி

"சிறு நீர்ப்பாசனத் திட்டத்தை வட பகுதியில் அமுல் செய்வதற்கான சகல ஆக்க வேலைகளிலும், எமது கிருஷிக இலாகா முயற்சி எடுத்து வருகிறது. இதைக் கொண்டு வடபகுதி விவசாயிகளின் நீர்க் கஷ்டங்கள் நிவர்த்தி செய்யப்படும்"

இவ்வாறு தென்மராட்சி பச்சிலைப்பள்ளி பயிர்ச்செய்கைக் குழுவின் சமாசக் கூட்டத்தில் பேசிய கிருஷிக சேவை இலாகா ஆணையாளர் திரு, எஸ் பி சேனநாயக்கா கூறினுர்.

தென்மராட்சி பச்சிலைப் பள்ளியைச் சேர்ந்த 40 பயிர்ச் செய்கைக் குழுவின் கூட்டத்தினுல் ஒழுங்கு செய்யப்பட்ட இக் கூட்டம் சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடையெற்றது, திரு எஸ் கே திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு சேனநாயக்கா மேலும் கூறியதாவது:

"மகாவலி கங்கையை வடக்கே திருப்பும் முயற்சி ஆரம்பமாகியுள்ளது. இதை தொடர்ந்து வட பகுதியிலுள்ள சகல விவசாயிகளும் பயன் பெறுமுகமாக, சிறு நீர் பாசன திட்டத்தை வட பகுதியில் அமுல் செய்வதற்கான முயற்சியில் எமது இலாகா ஈடுபட்டுள்ளது.

இப்பொழுது இப்பகுதியில் பயிற்செய்கைக் குழுவிற்காக அறவிடப்படும் வரி விகிதம் பற்றி குறைகள் இருப்பதாக எமக்குப் புகார்கள் கிடைத்திருகின்றன அதாவது இரண்டு போகங்கள் நெற்பயிர் செய்யும் விவசாயிகளிடமும், ஒருபோகம் மட்டும் நெல் விதைக்கும் விவசாயிகளிடமும் வரித் தொகை 6 ரூபா வசூலிக்கப்படுவதாகவும் அப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது இப்புகார் பற்றி எமது மேலிடத்தில் நன்கு ஆலோசனை நடத்திய பின் வரும் உத்தரவைக்கொண்டு தான் உங்களுக்கு ஒரு முடிவைக் கூற முடியும் என்று கூறிய திரு சேனநாயக்கா பயிரை அழிக்கும் மாடுகளை சுடுவதற்கான ஒழுங்குகள் செய்யப்படவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை விடுத்தபோது அவர் அந்த வேண்டுகோளை அடியோடு நிராகரித்தார்

பயிரை மாடுகள் அழிப்பதற்கு முக்கிய காரணமாக உள்ளது அந்த மாட்டுச் சொந்தக்காரர்களே தவிர மாடுகள்அல்ல. எனவே அந்த வாய்பேசா மிருகங்களை சுட்டுக் கொல்வதற்கு நான் ஒரு பௌத்த மதத்தவன் என்ற முறையில் அனுமதிக்கவே மாட்டேன். மாடுகள் பயிரழிவு செய்யும்போது அதற்கான தண்டனையை

(4-ம் பக்கம் பார்க்க)

# உலகப் பிரச்னைகள் பற்றி கோஸிஜின் - இந்திரா ஆலோசனை

புதுடில்லி, செப். 6

இந்தியாவுடனை உறவுகளைப் பலப்படுத்தத் தாம் இயன்றளவு முயற்சி எடுக்கப்போவதாகச் சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் இன்று புதுடில்லியில் கூறினுர்.

திரு. கொஸிஜின் ஹனுேய் செல்லும் வழியில் புதுடில்லியில் இறங்கி, பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் சுமார் ஒருமணி நேரம் ஆலோசனைகள் நடத்திஞர். பேச்சுவார்த்தைகளில் உதவியாளர்கள் எவரும் இருக்கவில்லை. பேச்சுக்களின்போது விவாதிக்கப்பட்ட விஷயங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை ஆனுல் திரு. கொஸிஜின் நிருபர்களிடம் பேசுகையில் 2 நாடுகளுக்கும் பரஸ்பரம் அக்கறையுள்ள விஷயங்களும், பல்வேறு உலக விவகாரங்கள் பற்றியும் ஆலோசிக்கப்மட்டதாகக் கூறினுர். இந்தியாவுக்கு மீண்டும் வந்திருப்பதிலும், திருமதி காந்தியுடன் ஆலேசானை கலக்க முடிந்ததிலும் தாம் பெரிதும் மகிழ்ச்சியடைவதாக திரு. கொஸிஜின் கூறினுர்.

தாங்கள் நடத்திய பேச்சுக்கள் முக்கியமானவை, பயனுள்ளவை என்று அவர் கூறினுர். பேசுவதற்கு ஏராளமான விஷயங்கள் இருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகள் விமானநிலையத்தில் உள்ள பிரமுகர்கள்அறையில் நடைபெற்றன.

## நெல்போடும் கருவி அறிமுகம்

பூநகரி, சனி

பூநகரியைச் சேர்ந்த செல்லியா தீவு என்னும் கிராமத்தில் 'மானிக்ஸ்' எனப்படும் நெல்போடும் கருவி அறிமுகப் படுத்தப்பட்டது. ஏராளமான விவசாயிகள் முன்னிலையில், விவசாயப் பகுதியினர் இக் கருவியைச் செயல் படுத்திக் காண்பித்தனர்.

# 'ஆஸ்பத்திரியின் பொறுப்பற்ற தனம் என் குழந்தையை பலி எடுத்தது'

கொழும்பு, ஞாயிறு

அரசினர் ஆஸ்பத்திரியின் பொறுப்பற்ற போக்கே தனது குழந்தையைப் பலிஎடுத்துவிட்டதாக குற்றஞ்சாட்டியிருக்கிருர் ஒரு தந்தை,

திருகோணமலை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட தனது 3 வயதுக் குழந்தையான ஜீவபாலன் மரணமானது குறித்து திருகோணமலை சமது வீதியில் வசிக்கும் ப நீலகண்டன்சுகாதார சேவை அதிகாரிக்கு நீண்ட கடிதமொன்றை எழுதியிருக்கிருர்.

அக்கடிதத்தில் அவர்குறிப்பிட்டுள்ளதாவது:-

'கடந்த மாதம் 19ந் திகதி வலி ஏற்பட்டதால், என் குழந்தையை ஆஸ்பத்திரிக்கு இரவு10 மணிக்குச்எடுத்துச் சென்றேன். டாக்டர்ஒருஊசி மருந்தை எழுதித்தந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கும்படி தெரிவித்தார். அந்தத் துண்டைப் பார்த்த 'நர்ஸ்' ஊசியைப் போடாமல், குழிகையைக் கொடுத்தார். காரணம் கேட்டபோது குறிப்பிட்ட ஊசிமருந்து குளிர்சாதனப் பெட்டிக்குள்பூட்டி வைக்கப்பட்டிருப்பதாகவும் எடுக்க முடியாதிருப்பதாகவும் கூறினுர் இதன் பிறகு குழந்தையை அடுத்தநாள் பகல் 3 மணிவரை எவரும் பார்க்கவில்லை இதன் பிறகு குழந்தைக்கு வலி ஏற்பட்டது டாக்டரிடம்கூறி குழந்தையைப் பார்க்கச் செய்தோம் ஊசிமருந்து பின்னரும் போடப்படவில்லை வெளியேஅந்த ஊசி மருந்தை வாங்கித் தருவதாகக் கூறினேம், அதற்கு விடவில்லை அன்றிரவு 1 மணிக்கு வலி மோசமானது 'நர்ஸ்' குழந்தைக்கு 'டிஸ்பிரினை' அப்போதுகொடுத்தார் 21ந் திகதி குழந்தை காலமாகிவிட்டது இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுங்கள்'.

இப்படிக் கேட்டிருக்கிருர் இறந்த குழந்தையின் தந்தை

# யாழ். நகரில் விரைவில் புற்றுநோய் சிகிச்சை நிலையம்

கொழும்பு, சனி

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் புற்று நோய்ச்சிகிச்சைக்கான 'கோபால்ற்யூனிற்' நிலையம் விரைவில் நிறுவப்படும்

இன்று ஆட்சிமன்றத்தில் சுகாதார அமைச்சர் திரு ஈ எல் சேனநாயக்கா இந்தத் தகவலைத் தெரிவித்தார்

சுகாதார அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:-

யாழ்: நகரில் அமைக்கப்படவிருந்த இந்த சிகிச்சை நிலையத்தைகண்டிக்குமாற்ற முடிவு செய்திருப்பதாக வதந்தியொன்றைச் சிலர் கிளப்பிவிட்டுள்ளனர்: இதில் எவ்வித உண்மையுமில்லை மகரகம ஆஸ்பத்திரியில் ஒரு 'கோபால்ற்யூனிற்' நிலையம் இருக்கிறது. அடுத்தாக இது யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளது:

## மலேரியா குறித்து எச்சரிக்கை

உலக சுகாதார சங்கம் மலேரியா குறித்து எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளது 10 வருடத்துக்கு இலங்கை மலேரியா விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். 67-ம்68-ம் ஆண்டில் 25 பேர் மலேரியா நோய்க்கு இலங்கையில் பலியாகியுள்ளனர். 68-ம் 69-ம் ஆண்டில் 19 பேர் இறந்துள்ளனர் என்று குறிப்பிட்டார் அமைச்சர்,

மலேரியா தடுப்பு இயக்கத்துக்கு 2கோடி 20லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது:

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டொலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

ரூபா 150 பெறுமதியான நல்ல சயிச்கிள் தேவை. V. நடராசா, நெடுங்குளம்வீதி, யாழ்ப்பாணம். 1381

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 7—9—69

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ அன்ட் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 49 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை, 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன்ட் 61 மீ**

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 சங்கமம், 5-00செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தினவாழ்த்துக்கள், 5-15 சிறுவர்பாடல், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 பாமாலை, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03வயலின், 7-35 குங்குமம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, 10-30 செய்திச்சுருக்கம்.

## ஆண்டு விழாவும் நாடகப் போட்டியும்

பச்சிலைப்பள்ளி, சனி

எழுதுமட்டுவாள் நடேசர் தமிழ் மன்றத்தின் ஆறுவது ஆண்டுவிழாவும் அகிலஇலங்கைத் தமிழ்நாடகப்போட்டியும் இம்மாதம் 2-ம் திகதி எழுதுமட்டுவாள் நடேசர் தமிழ்மன்ற அரங்கில் நடைபெற்றன.

இவ்விழாவுக்கு மிருசுவில் கிராம சபைத்தலைவர் திரு. பாலசிங்கம் தலைமைவகித்தார். நாடகப் போட்டியில் தாளையடி வீரமாமுனிவர் நாடக மன்றம் முதலிடத்தைப்பெற்றது.

## இலவச வெளியீடு

15-9-69 அன்று விநாயக சதுர்த்தி விரதம் வருவதால் ''விநாயகர் வரலாறும் தோத்திரப் பாடல்களும் என்னும் புத்தகத்தை இலவசமாக வழங்குகிறோம். தேவையானோர் பெற்றுக் கொள்ளலாம்.

மில்க்வைற்சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்.

## இன்றுகும்பாபிஷேகம்

கொழும்பு, சனி

மாவநெல்லை ஸ்ரீ கதிரேசன் கோவிலில் இம்மாதம் 7-ம் திகதி காலை சர்புரோக்ஷணமகா கும்பாபிஷேகம் நடைபெறவிருக்கிறது. இதனைத்தொடர்ந்து 11 நாட்கள் விசேஷ அபிஷேக ஆராதனைகள்நடைபெறும் இறுதி நாளன்று சுவாமி வீதிவலம் வருவார்.

## புதிய ஜே.பி.

பருத்தித்துறை, சனி

கரவெட்டி கிழக்குப் பகுதியில் கடந்த 30 ஆண்டுகளாக கிராம விதானையாகக் கடமையாற்றிஓய்வு பெற்ற திரு. வே. சதாசிவம்கரவெட்டிப்பகுதிக்குச் சமாதானநீதிபதியாக, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு ஸி. எம். தர்மலிங்கம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

## திருடினார்

மல்லாகம், சனி

இணுவிலைச் சேர்ந்த வீ. நடராசா மீது இராசரத்தினம் என்பவருக்கு சொந்தமான மூன்று மாடுகளை திருடியதாக சுன்னுகம் பொலிஸார் குற்றஞ்சாட்டியிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து மல்லாகம் மாஜிஸ்திரேட எதிரியின் கைவிரல் அடையாளம் பதிவு செய்ய உத்தரவிட்டு தண்டனை வழங்குவதை இம்மாதம் 12-ம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

## 'உடன்நடவடிக்கை வேண்டும்'

அளவெட்டி, சனி

''ஏராளமான உல்லாசப் பிரயாணிகள் வந்து போகும் சரித்திரப் பிரசித்திபெற்ற கீரிமலையில் பஸ் நிலையம் நிறுவ அரசங்கம் நிதிஒதுக்கியும் பஸ் நிலையம் அமைக்கப் படாததால் உல்லாசப் பிரயாணிகளும், பொது மக்களும் பெரும் கஷ்டத்துக்குள்ளாகி யுள்ளனர். ஆகவே உடன் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.'' இவ்வாறு கீரிமலை நகுலேஸ்வர சனசமூக நிலையம் இ. போ. ச. முகாமையாளரைக் கோரியுள்ளது.

பஸ்நிலையத்துக்கான இடம் ஒதுக்கப்படுவதுடன் நிதியும் ஒதுக்கப்பட்டு பல வருடங்களாகின்றன. ஆனால் இன்னும் பஸ் நிலையம் நிறுவப்படவில்லை.

இதுபற்றி இப்பகுதியில் உள்ள பல சங்கங்களும், பிரயாணிகள் சங்கங்களும் அரசாங்கத்துக்கு எடுத்துக் கூறியும் இதுவரை பயன் கிடைக்க வில்லை.

## கீரிமலை அசுத்தமாகிறது

அளவெட்டி, சனி

கீரிமலையில் தினமும் நிகழும் களவுகள் மற்றும்முறை கேடுகளால் கீரிமலை குடியேற்ற வாசிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை விஸ்தரிப்புக்கென போயிட்டிக் கிராமம் சுவீகரிக்கப்பட்டதால் இவ்விடத்திலிருந்த மக்கள் கீரிமலையில் ஒரு குடியேற்றத் திட்டம் அமைக்கப்பட்டு அங்கு குடியேற்றப்பட்டனர். இந்த குடியேற்றத் திட்ட வாசிகளே இதனுல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## மாட்டுக்களவு அதிகரிப்பு

பருத்தித்துறை, சனி

கரவெட்டிப்பகுதியில் அண்மைக்காலத்தில் பெருமளவு மாடுகள் களவு போவதாக அறியப்படுகிறது. இம் மாடுகள் லொறிமூலம் வேறிடங்களுக்கு அனுப்பப்படுவதாயும், இறைச்சிக்கடைக்காரர் அவற்றை வாங்குவதாகவும் பேசிக்கொள்ளப் படுகிறது.

இப்பகுதிகளில் சமீபகாலத்திலிருந்து பொலிசார் இரவு ரோந்து சுற்றுமையே களவுகளுக்குக் காரணமெனத் தெரிகிறது.

## மீனவர்

## செய்திச் சுருக்கம்

### உப்பளத்தை அரசாங்கம் ஏற்கமாட்டாது

கோட்டை, சனி

புத்தளப் பகுதியிலுள்ள காரைதீவு என்னுமிடத்தில் உள்ள உப்பளத்தை அரசாங்கம் பொறுப்பேற்க மாட்டாதுஎன கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன ஆட்சி மன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் இந்த உப்பளம் பற்றித் தெரிவிக்கையில் நாட்டிலுள்ள மற்றைய தனியார் உப்பளங்கள் போன்று இதுவும் செயற்படுமெனத் தெரிவித்துள்ளார்

### தொடர்ந்து நடைபெறுகின்றது

கோட்டை, சனி

31-ம் திகதி தொடக்கம் வேலைநிறுத்தத்திலீடு பட்டுள்ள கடற்றொழில் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த 3 தொழிற்சங்கங்கள் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சருடன் வெள்ளிக்கிழமையன்றுநடத்திய சமரசபேச்சுவார்த்தைதோல்வியடைந்த காரணத்திஞல் தொடர்ந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன.

இத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தவுள்ளனர், அதே வேளையில் இக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த மற்ற தொழிற்சங்கங்களும் வேலைநிறுத்தத்தில் இறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கைத்தறி மதிப்புக் குறைகிறது

கல்முனை, சனி

நெசவுத் தொழிலில் தற்பொழுது மின்தறிகள் உபயோகிக்கப் படுவதால் கைத்தறித் துணிகளின் மதிப்புக் குறைந்து கொண்டு வருவதோடு தொழிலாளர்கள் பலர் பாதிக்கப்படுகிறார்கள். ஆதலால் இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும்

தேசிய நெசவுத் தொழிலாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது வருடாந்த பொதுக் கூட்டத்தில் மேற்[illegible]டவாறு தெரிவித்து இது[illegible]பந்தமாக நடவடிக்கை எ[illegible] அரசாங்கத்தைக் [illegible] தீர்மானித்துள்ளது.

## விக்டோரியா வெற்றி

பூநகரி, சனி

பூநகரிகாரியாதிகாரிபகுதியினரால் நடாத்தப்படும் தாச்சிச் சுற்றுப் போட்டி 4வது தினமாக பூநகரி கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் மட்டுவில்நாடு விக்டோரியா விளையாட்டுக் கழகமும் ஞானிமடம் ஐக்கிய விளையாட்டுக் கழகமும் மோதின. 15 பழங்களால் பூநகரி விக்டோரியாக் கழகம் வெற்றியீட்டியது. பூநகரிப் பகுதி விளையாட்டதிகாரி திரு எம். அலோசியஸ் மத்தியஸ்தம் வகித்தார். பூநகரி கிராம சபைத் தலைவர் தலைமை வகித்தார்.

## ஸ்பேஸ் வென்றது

பருத்தித்துறை, சனி

புதுத்தோட்டம் சுடரொளி விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கரவெட்டி ஸ்பேஸ் கோஷ்டியும் தம்பசெட்டி. காந்திக்கோஷ்டியும்மோதி கொண்டபோது ஸ்பேஸ் கழகம் 2 1ஆட்டங்களால் வெற்றியீட்டியது.

## சைக்கிள் திருடியவர் றிமாண்டில்

மல்லாகம், சனி

சுன்னுகம் பொலிஸாரால் 35 ரூபா பெறுமதியான சைக்கிளை களவாடியதாக வீரையாமணி என்ற 17 வயது வாலிபர் மீது தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். மல்லாகம் நீதிபதி திரு. எஸ். ஆனந்தகுமாரசாமி எதிரியின் கைவிரல் அடையாளம் பதிவு செய்ய உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதற்கு இம்மாதம் 12-ம் திகதி வரை எதிரியை றிமாண்டில் வைத்துள்ளார். சப் இன்ஸ்பெக்டர் பெரேரா வழக்கை நடாத்திஞர்.

## பஸ் தீப் பிடித்தது

கோட்டை, சனி

ஓடிக்கொண்டிருந்த இரட்டைத்தட்டு பஸ் திடீரெனத் தீப்பிடித்து எரிந்தது. இவ் விபத்துச் சம்பவம் தெகிவளை பஸ்நிலையத்தில் நடைபெற்றது. கோட்டையிலிருந்து வந்து கொண்டிருந்த இரட்டைத்தட்டு இ.போ.ச [illegible] தீப்பிடித்து எரி[illegible]ங்கியது. பஸ்ஸிலிருந்த பிரயாணிகளும்

## கான்ஸ்டபிளுக்கு தூக்கு

மட்டக்களப்பு, சனி

கல்முனை பொலிஸ்கான்ஸ்டபிள் கொலைவழக்கில் எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. கிழக்குமாகாண அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் சி. ஜி. வீரமந்திரி முன்னிலையில் 15 நாட்கள் இவ் வழக்கு விசாரணை நடைபெற்றது.

ஜூரி சபையினர் சுமார் 1 மணிநேரம் தனிமையில் மந்திராலோசனை செய்த பின் எதிரி குற்றவாளியென ஏகமனதாக தீர்ப்பளித்தனர்- இதைத் தொடர்ந்து நீதியரசா எதிரிக்கு மரண தண்டனை விதித்தார்

இவ் வழக்கில் கல்முனையில் பொலிஸ் கன்ஸ்டபிளான பிலிப்புப் பிள்ளை பீற்றர்சிங்கம் என்பவர் பொலிஸ் கான்ஸ்டபிளான எஸ் ஐயாத்துரையை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

## களத்தாவ கொலைவழக்கு

கோட்டை, சனி

களத்தாவ கொலைவழக்கு கொழும்பு அசைஸ் நீதிமன்றத்தில் அக்டோபர் மாதம் 11-ம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. முடிக்குரிய தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட மனுவைத் தொடர்ந்து இவ் வழக்கு கண்டி நீதிமன்றத்திலிருந்து கொழும்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் அல்பிரட் டீ சொய்சா பியதாசா, வில்லிமாமா ஆகியோர் டேவிற் பெரேரா சந்திர சகரா ஆகியோரை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## ராகவன் யாழ் வருவார்

அளவெட்டி, சனி

தமிழக அறிஞர் திரு, ராகவன் காங்கேசன்துறைக்கு இம் மாதம் நடுப்பகுதியில் வரவிருக்கிறார்.

தமிழக அறிஞர் நுண்கலைச் செல்வன் திரு இராகவன் தற்போது கொழும்புக்கு வந்து பல சொற்பொழிவுகள் நிகழ்த்தி வருகிறார்.

இவரை தாம் நடாத்தும் பாரதி விழாவில் கலந்து கொண்டு சொற் பொழிவு நிகழ்த்த வேண்டும் என்று காங்கேசன்துறை இளம் த[illegible]ழ்மன்றத்தினர் திரு. இராகவனிடம் கேட்டிருந்தனர்.

## ஆசிரியருக்கு

## ஓடும் ரயிலில் நஞ்சருந்தித் தற்கொலை

பச்சிலைப்பள்ளி சனி

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புவனேந்திரன் (வயது 27)என்பவர் நேற்று கிளிநொச்சிக்கும் பளைக்கும் இடையில் ஓடும்புகையிரதத்தில் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். பளை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் சிகிச்சையெதுவும் பயனளிக்காமல் அங்கேயே மரணமானுர்

இவர் இரண்டு வருடத்துக்கு முன் விவாகமானவரென்றும் கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவில் உதவிப் போர்மனுக கடமையாற்றிஞர் என்றும் சில நாட்களின் முன் வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தாரென்றும் வேலை நீக்கமே இவரின் தற்கொலைக்குக் காரணமென்றும் விசாரணையில் கூறப்பட்டது. இவர் தனது மைத்துனரான நாகலிங்கத்துக்கு எழுதிய கடிதம் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது, பளை வைத்திய அதிகாரியின் பரிசோதனையின் பின் பச்சிலைப்பள்ளி திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. கே. எஸ். இராசையா தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். ......

## தென்மராட்சிக்கு பொது நூல்நிலையம்

அளவெட்டி, சனி

தென்மராட்சிப் பகுதியிலுள்ள கைதடி வடக்குக் கிராமத்தில் ஒரு மத்திய பொதுஜன நூல்நிலையம் அமைத்துத்தருவதாக உள்ளூராட்சி அமைச்சர் கைதடி வடக்கு கிராமசபை தூதுக் குழுவிடம் உறுதி அளித்துள்ளார்

கைதடி வடக்கு கிராம சபைத்தலைவர் திரு. ஆர். செல்லையா, உப தலைவர் திரு. ஆர். சிதம்பரம் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று கொழும்புக்குச் சென்று உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவிடம் குறைகளை எடுத்துக்கூறினுர்கள்

கல்லாகம் வீதி திருத்துவதற்காக 13 ஆயிரம் ரூபாவை விசேஷ நிதியாகத் தருவதாகவும் கிராமசபைக்கு ஒரு நிரந்தரக் கட்டிடம் அமைத்துத்தருவதாகவும் அமைச்சர் குழுவிடம் உறுதியளித்தார்

மேற்படி குழு சுகாதார நிரந்தர செயலாளரைச் சந்தித்துப் பேட்டி கண்டபோது மிகவிரைவில் கைதடி வடக்கில் ஒரு மரு

## 9 பேரும் சித்தி

கோப்பாய், சனி

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் ஜீ. ஸி. ஈ. (கலை) உயர்தர பரீட்சைக்குத் தோற்றியவர்கள் 9 பேரில் 9 பேருமே சித்தியடைந்துள்ளனர். இதில் அரைவாசிப்பேர் விசேஷ சித்தி பெற்றுள்ளனர்.

## சித்தி பெற்றேர்

வெள்ளவத்தை, சனி

வெள்ளவத்தை நாவலர் கழகத்திலிருந்துஜி. ஸி. ஈ(உயர்தர) பரீட்சையில் தமிழ் மொழிமூலம் கலைப்பிரிவில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

செல்வி கே சகுந்தலா, செல்வன்கள். சபா இராசேந்திரன், என். சிவனேசன், க. பேரம்பலம் கழகத்திலிருந்து முதல் தடவையாக இந்து சமய பாடம் எடுத்த இரு பரீட்சார்த்திகளும் சித்தியடைந்துள்ளனர்.

## விரைவில் நியமன

அளவெட்டி, சனி

தெல்லிப்பளை தபால் நிலையத்தில் தரம் பிரிப்பாளர் ஒருவர்மிகவிரைவில் நியமிக்கப்பட விருக்கிறார்.

இதையிட்டு திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தபால் அதிபருடன் தொடர்பு கொண்டதன் பயனுக இந்தப் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு தற்போது நேர்முகப்பரீட்சையும் நடத்தப்படடுள்ளது.

சுருவில்

## அன்னை மரி மாதா திருநாள்

வேலணை, சனி

சுருவில் பரிசுத்த அன்னை மரி மாதா திருநாள் சென்ற சனிக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு சற்பிரசாத சுற்றுப் பிரகாரம் நடைபெறும் தேவமாதாவின் பிறந்த தினமாகிய மறுநாள் காலை 7 மணிக்கு திருநாட்பாடற்பூசையுடன் திருச்சுருப சுற்றுப் பிரகாரத்துடன் வருடாந்த திருநாள் முடிவடையும்.

## விஞ்ஞான

ராணி
(யாழ்ப்பாணம்)
[தினசரி 3 காட்சிகள்]
சிவாஜி — ஜெயலலிதா, சௌகார் ஜானகி
நடித்த
எங்க ஊர் ராஜா


65-வது தினம்
ராஜா
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65-வது தினம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ், தங்கவேலு, பத்மினி, பேபி ராணி நடித்த
விஜயா: சுரேஷ் கம்பைன்ஸ்
குழந்தைக்காக
கதை-வசனம்: துறையூர் மூர்த்தி பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்
குழந்தைக்காக நீங்கள் வாங்கும் அரை டிக்கட்டுகளை கவனமாக வைத்திருங்கள். பலபரிசுகள் காத்திருக்கின்றன உங்கள் குழந்தைக்காக!

யாழ் வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், புஷ்பலதா, நடித்த
பால்குடம்

யாழ்நகர் வெலிங்டன்
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயா தினங்களில் காலை 10-30 மணிக்கு மெட்னி
மற்றும் சில சினிமாஸ் திரைகளில்



ரங்கராவ் ★ அஞ்சலிதேவி
பாலையா ★ பேபி ரோஜாரமணி
எல். விஜயலக்ஷ்மி ★ ஏ. கருணாநிதி
பாலமுரளி கிருஷ்ண ★ கீதாஞ்சலி
வாணிஶ்ரீ ★ ஜெயந்தி ★ நிர்மலா
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். அளிக்கும்
பக்த பிரஹலாதா
(ஈஸ்ட்மென் கலர்)

களவுகளுக்குக் காரணமெனத் தெரிகிறது.

## மீனவர் அச்சம்

பச்சிலைப்பள்ளி, சனி

தாளையடிப்பகுதியிலிருந்து ஆழ் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லும் இயந்திரப் படகுத் தொழிலாளர் மிகவும் அச்சமடைந்துள்ளனர். நீண்ட இடைவேளையின் பின் மீன்பிடிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான மீன்பிடிக்கப்பல் இப்பகுதிக் கடலில் மீன்பிடியிலீடுபட்டிருப்பதே இவர்கள் அச்சத்திற்குக் காரணமாகும் நேற்று ஆழ் கடலுக்குச் சென்ற இயந்திர வள்ளங்கள் பல உடனேயே கரையை நோக்கி விரைந்தன. இரண்டு மாதத்துக்கு முன் இப்பகுதியைச் சேர்ந்த திரு. இ. செல்லத்தம்பி என்பவருக்குச் சொந்தமான இயந்திரப்படகு கப்பலால் மோதியும் அடித்தும் சேதப்படுத்தப்பட்டது. இது பற்றி பருத்தித்துறை ஆட்சி மன்ற உறுப்பினர் எடுத்த நடவடிக்கையின் பின் இப்பகுதிக்குக் கப்பல் வராமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி 6-30, 9-30.
[illegible]போயா, போயா காலை 10-30
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா நடித்த
முகூர்த்த நாள்

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, இரவு 10-00
[illegible]போயா, போயா 2-30 மணி
சிவாஜி-கே ஆர் விஜயா நடித்த
[illegible]ட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7. & 9-45p m
Brett Halsey as the Secret agent 007
in
ESPIONAGE IN LISBON
(Spy film)

REGAL JAFFNA
Daily 4-45, 7-00&9-45p.m
Hayley Mills
Eu Wallach
in
THE MOON SPINNERS

தில் மேற்[illegible]டவாறு தெரிவித்து இதுசம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதென தீர்மானித்துள்ளது.

## மனுப்பத்திரம் இல்லை

இரத்தினபுரி, சனி

இப்பகுதியிலுள்ள மக்கள் பிரஜா உரிமை மனுப்பத்திரம் பெறுவதில் மிகவும்கஷ்டப்படுகிறார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின்படி பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்கும் காலஎல்லை நெருங்கிவிட்டதெனவும் அதற்கானவிண்ணப்பப் பத்திரங்கள் இங்குள்ள தோட்ட அதிகாரிகளுக்கு அனுப்பப்படாததால் இப்பகுதிமக்கள் பத்திரங்களைப் பெற இயலாதவர்களாக உள்ளனர் எனவும் புகார் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்கள் நாடற்றவர்கள் பிரச்னை நீடிக்கலாமென அஞ்சுகின்றனர்.

## இலங்கைக்கார்கள் ஏற்றுமதி

கோட்டை, சனி

சமீபத்தில்இலங்கைக் கார்கள் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து இன்னும் பல கார்களை இலங்கை ஏற்றுமதி செய்யட் விருக்கிறது.

இங்கு பொருத்தப்பட்ட இஸ்லி கார்கள் மூன்றை சிலநாட்களுக்கு முன்னர் மாலைதீவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்துள்ளது. தவைத் நாட்டுக்கு முதன் முதலாக கார்களை ஏற்றுமதி செய்த இலங்கை இப்பொழுது இரண்டாவது த[illegible]வையாக மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்துள்து.

## மாதிரிபண்ணைகள்

மன்னார், சனி

இங்குமாதிரி விவசாயப் பண்ணைகள் பல நிறுவப்படவிருப்பதாக மன்னார் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி ஜனாப் எம். சி. எப். முஸ்தாபா அறிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள மூன்று காரியாதிகாரி பிரிவுகளிலும் நிறுவப்படவிருக்கும் இம்மாதிரிபண்ணைகள் விவசாய இலாகாவினால் இவ்வாண்டு காலபோகத்தில் நிறுவப்படவிருக்கின்றன.

இப்பண்ணைமூலம் விவசாயிகளுக்கு விவசாய போதனைகளும் பயிர்ச் செய்கை சம்பந்தமான செயல்முறை விளக்கமும் அளிக்கப்படுமென தெரிகிறது.

ந்து வந்து கொண்டிருந்த இரட்டைத்தட்டு இ.போ.ச பஸ்ஸே தீப்பிடித்து எரியத் தொடங்கியது. பஸ்ஸிலிருந்த பிரயாணிகளும் சாரதியும் வெளியே குதித்துத் தப்பிக் கொண்டனர்.

பொலிசாரும் தீயணைக்கும் படையினரும் பஸ்ஸில் தொடர்ந்து தீபரவாது தீயை அணைத்தனர்.

## இடமாற்றம்

பருத்தித்துறை, சனி

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலிருந்து திரு. எஸ். தங்கராசா நெல்லியடிமத்திய மகாவித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார். அண்மையில் சித்திர பாடக் கல்வியதிகாரியாக நியமிக்கப்பட்ட திரு. எஸ். கனகசபையின் இடமாற்றத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## குப்பிளான் ஒளிபெறும்

அளவெட்டி, சனி

இதுகாலவரையும் இருளில் மூழ்கிக் கிடந்த குப்பிளான் கிராமம் மிக விரைவில் ஒளிபெறப்போகிறது.

உடுவில் தொகுதிக் குட்பட்ட ஏழாலைக் கிராமசபை எல்லைக்குள் இருக்கும் குப்பிளான் கிராமத்துக்கு இதுகாலமும் மின்சாரம் கிடைக்காததால் மக்கள் பெரிதுப் கஷ்டமடைந்திருந்தனர்.

குப்பிளான் கிராமத்தில் பிரபல பாடசாலைகளும் நெல் குற்றும் இயந்திரசாலைகளும், பெரிய வீடுகளும் இருப்பதால் மின் சாரம் இல்லாததால் பெரும் கஷ்டமாகவிருப்பதாக குப்பிளான் மக்கள் உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கத்திடம் முறையிட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து திரு தர்மலிங்கம் நடவடிக்கை எடுத்ததன் பயனாக கிராமப்புற மின்சார விநியோகத் திட்டத்தின்கீழ் மின்சாரம் வழங்கப்படவிருக்கிறது.

மின்சார விநியோகத்துக்கான ஆரம்ப வேலைகள்அக்டோபர்மாதத்தில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆதரவு

அளவெட்டி, சனி

நாகரீக மங்கையர் அணியும் மினிஸ்கேட்டை எதிர்த்து ஊர்வலம் ஒன்றை நடாத்த ஈழத்தமிழ் மன்றம் முடிவுசெய்ததை ஆதரித்து கீரிமலை நகுலேஸ்வரர் சனசமூகநிலையம் ஒருகடிதத்தை ஈழத் தமிழ்மன்றத் தலைவருக்கு அனுப்பியுள்ளது.

த[illegible]ழ்மன்றத்தினர் திரு. இராகவனிடம் கேட்டிருந்தனர்.

## ஆசிரியருக்கு தங்கப்பதக்கம்

வல்வெட்டித்துறை, சனி

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த திரு. கே. வீரகத்தி ஆசிரியர் உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆய்வுப்பகுதியினரால் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டியில் முதலிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தை பெற்றுள்ளார். ''ஈழத்து தமிழ் வளர்ச்சி'' என்னும் கட்டுரையே இவ்வாண்டுக்கு முதலிடத்தைப் பெற்ற கட்டுரையாகும்.

## புதிய வீதி

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பு பட்டின சபைத் தலைவரின் முயற்சியினால் பண்டத்தரிப்பு பொது மயானத்துக்குச் செல்லும் வீதி நவீன முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

இவ்வீதி திருத்துவதற்கு மத்திய அரசாங்கம் ரூபா 3000 கொடுத்து உதவியது. மிகுதிச் செலவைப் பண்டத்தரிப்புப் பட்டின சபை பொறுப்பேற்றது.

## வாலிபரை பொலிசார் எச்சரித்தனர்

யாழ்ப்பாணம், சனி

எட்டுப் பிள்ளைகளின் தாய் ஒருவருடன் தகாத முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கூறப்படும் 17 வயது வாலிபர் ஒருவரை பொலிசார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் நல்லூர் கோவில் வீதியில் நடைபெற்றதாக நல்லூர் பொலிசார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட வாலிபர் எச்சரிக்கை செய்யப்பட்டு செல்ல அனுமதிக்கப்பட்டார் குறிப்பிட்ட பெண்ணை அவரது சகோதரர்களின் உதவியுடன் பொலிசார் அனுப்பிவைத்தனர். (கா நி.

## நடனவகுப்பு

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம்அண்ணாமலை இசைத்தமிழ் மன்ற இசைக் கல்லூரி நடன வகுப்பை நல்லைஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்தார்.

யளித்தார்

மேற்படி குழு சுகாதார நிரந்தர செயலாளரைச் சந்தித்துப் பேட்டி கண்டபோது மிகவிரைவில் கைதடி வடக்கில் ஒரு மருத்துவ விடுதியைக் கட்டித் தருவதாக அவர் வாக்குறுதியளித்தார் ......

## கல்லூரி வெள்ளி விழா

அளவெட்டி, சனி

அளவெட்டி அருணோதயாக் கல்லூரியின் 75 வது ஆண்டு வெள்ளிவிழா எதிர் வரும் திங்கட்கிழமைமாலை 6-30 மணிக்கு கல்லூரி திறந்தவெளியரங்கில் நிகழ இருக்கிறது.

மேற்படி கல்லூரி 75-வது ஆண்டு ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை காங்கேசன் துறை எம் பி. திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் திறந்து வைப்பார்

வடமாநில வித்தியாதிபதி திரு எஸ். தணிகாசலம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். திரு எம் வைரமுத்து ஸ்தாபகர் நினைவுரை நிகழ்த்துவார்.

திரு எஸ். சிவபாலசுந்தரம் 75-வது ஆண்டு நிறைவுரை நிகழ்த்துவார்.

திரு எஸ. இளையதம்பி தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் திரு ரி. ரி. ஜெயரத்தினம், மல்லாகம் கிராமசபைத்தலைவர் திரு வி பொன்னம்பலம், மூதவை உறுப்பினர் திரு எஸ், நடராசா, திரு எம், திருநாவுக்கரசு ஆகியோரும் உரை நிகழ்த்தவிருக்கின்றனர்.

## இலவச விதை நெல்

பருத்தித்துறை, சனி

கரவெட்டி கிழக்குப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு அரசாங்க உத்தரவாதத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே 250 புசல் விதைநெல்லும் பசளையும் வழங்கப்பட்டுள்ளன.

கரவெட்டி மேற்கிலுள்ள விவசாயிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 200 புசல் விதைநெல்லும் பசளையும் மிகவிரைவில் வழங்கப்படவிருப்பதாக பயிர்ச் செய்கைக்குழுச் செயலாளர் திரு சி, மு, மார்க்கண்டு கூறுகிறார். பெருமளவுக்கு எச் போர் விதை நெல்லையே கமத்தொழிற்பகுதி விநியோகிக்கவிருப்பதாகத் தெரிகிறது.

சுருப சுற்றுப் பிரகாரத்துடன் வருடாந்த திருநாள் முடிவடையும்.

## விஞ்ஞான கூடத்திற்கு மான்யம்

பருத்தித்துறை, சனி

தொண்டமானாறு மகா வித்தியாலய விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கென அரசாங்கம் கனடிய மான்யமான ரூபா 20,000 ஒதுக்கியுள்ளது. இவ் வருடத்திற்குள் பூர்த்தியாக்கப்படவிருக்கும் இவ் விஞ்ஞான கூடத்துக்கான விஞ்ஞான நூல்களை அமெரிக்க விஞ்ஞானப் பகுதியினர் அன்பளிப்பாக வழங்கவிருப்பதாகவும் தெரிகிறது.

## ப. செ. கு. நிர்வாகிகள்

பருத்தித்துறை, சனி

கரவெட்டி கிழக்குப் பயிர்ச் செய்கைக் குழுவின் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வை. சின்னத்தம்பி, செயலாளர்: திரு. சி. மு. மார்க்கண்டு, தனதிகாரி: திரு. க. வேலுப்பிள்ளை. ஒன்பது பேரைக்கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது

## தர்ம நிதிக்கு பணம் வழங்க உத்தரவு

மல்லாகம், சனி

ஏழாலையைச் சேர்ந்த நாகம்மா என்ற சிறுமியின் கழுத்துச் சங்கிலியை அறுத்துத் திருட எத்தனித்ததாக அதேயிடத்தைச் சேர்ந்த கந்தசாமி என்ற வாலிபருக்கு எதிரான வழக்கு மல்லாகம் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின் பின் எதிரியைத் தர்மநிதிக்கு 10 ரூபா வழங்க உத்தரவிட்டு நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார். எதிரி சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

வியாபாரம்பெருக
விளம்பரம்செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஸிஜின் ஹனோய் சேருமுன்பே சூ-என்-லாய் பீகிங் புறப்பட்டு விட்டார்

## சோவியத் தலைவரை சந்திக்க சீனத்தலைவருக்கு விருப்பமில்லை




ஹனோய், செப். 6

வடவியட்னும் ஜனதிபதி டாக்டர் ஹோ-சி-மின் மரணச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக சோவியத் பிரதமர் திரு கோஸிஜின் ஹனோய் நோக்கிப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கும் அதேவேளையில் சீன பிரதமர் திரு சூ-என்-லாய் ஹனோயிலிருந்து பீகிங்கிற்கு புறப்பட்டுப் போய் இருக்கிறார்.

டாக்டர் ஹோ-சி-மின் மரணச்செய்தி வெளியானவுடனேயே திரு. சூ-என்லாய் ஹனோய்க்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கு அவர் வடவியட்னும் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

டாக்டர் ஹோ-சி-மின் மரணக்சடங்குகளில் பங்கு கொள்ள சோவியத் பிரதமரும் விஜயம் செய்வாரா என்று அறிவிக்கப்பட்டிருந்ததால் சீனப் பிரதமரும் சோவியத் பிரதமரும் ஹனோயில் சந்தித்துக் கொள்ளக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சோவியத் தலைவர்களும் சீனத் தலைவர்களும் இரு நாடுகளுக்குமிடையே கொள்கைத் தகராறுகள் ஏற்பட்டதின் பின்னர் பல ஆண்டுகளாக நேரடியாகச் சந்தித்துக் கொள்ளவில்லையாதலால் ஹனோய் சந்திப்பு மிக முக்கியமானதாகவிருக்கும் என்று கருதப்பட்டது ஆனல் திரு ஹோசிஜின் மாஸ்கோவிலிருந்து புறப்படுவதற்குமுன்பே சூ-என்-லாய் ஹனோயிலிருந்து பீகிங் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஹனோயில் அவர் சிலமணி நேரம் இருந்தார்.

திரு. கோஸிஜின் ஹனோய் செல்லும் வழியில் இன்று காலை இந்தியாவில் சற்று நேரம் தாமதித்தார். அவரைப் பாலம் விமான நிலையத்தில் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவரை வரவேற்றுர் திரு ரோகஸிஜின் திருமதி இந்திராவுடன் உடனடியாக ஆலோசனைகள் நடத்தத் தொடங்கினுர். திரு கொஸீஜின் சுமார் 45 நிமிஷங்கள் இந்தியாவில் தங்கியபின்னர் ஹனோய்க்குப் புறப்பட்டார்.



தென்வியட்னமில் வியட்காங்கியர் நேற்று மூர்க்கமான ரொக்கட் தாக்குதல்களை நடத்தினுர்கள். அதிபர் ஹோ-சி-மின் மறைவுக்கு அஞ்சலிசெலுத்துமுகமாக மூன்று நாள் போர் ஓய்வு அறிவித்திருந்தபோதிலும் வியட்காங்கியர் நேற்று பலத்த தாக்குதலில் இறங்கியது ஆச்சரியமாகவிருந்தது. அமெரிக்கரின் 9 தளங்கள்மீது தாக்குதல் நடந்ததாகத் தெரிகின்றது. மொத்தம் 55 ரொக்கட்டுகள் ஏவப்பட்டதாகக் கூறப்பட்டது.

டாக்டர் ஹோ-சி-மின் இறுதிச்சடங்குகளில் இந்தியாவின் சார்பில் வெளிநாட்டமைச்சர்திரு தினேஷ் சிங் கலந்துகொண்டார் இதற்காக அவர் தமது மாஸ்கோ விஜயத்தை ரத்துச்செய்திருக்கிறுர்.

# அமெரிக்க தூதரைக்காப்பாற்ற பிரேஸில் அரசு முயற்சி

## புரட்சிக்காரர் நிபந்தனையை ஏற்றுக்கொள்ளச் சம்மதம்

பிரெஸிலியா, செப் 6 கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க தூதரை விடுவிப் அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் மட்டுமே அமெரிக்கத் தூதரை விடுவிக்க

## நேபாள மன்னர்

# தமிழ்நாட்டு செய்திக்கோர்வை

### சம்பளக் கமிஷன்

தமிழ்நாடு ஸ்தலஸ்தாபன ஊழியர்களுக்கும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் சம்பள விகிதங்களை சிபார்சு செய்ய தமிழ் நாடு அரசு இரண்டாவது சம்பளக் கமிஷன் ஒன்றை நிறுவியிருக்கிறது.

### போதன மொழி

தமிழ் நாட்டிலுள்ள மத்திய பள்ளிகளில் இந்தியைப் படிப்படியாக போதன மொழியாக்குவதை கைவிட்டு ஆங்கிலத்தையே போதன மொழியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மத்திய அரசை வற்புறுத்தும். இதைத் தமிழ்நாடு கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் நிருபர்களிடம் கூறினுர். இதோடு மத்திய பள்ளிகளில் தமிழைப் போதிப்பதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென வற்புறுத்தப் படும்.

### ஆள் மாருட்டம்

ஏப்ரல் மாதம் நடைபெற்ற சென்னை பல்கலைக் கழக எம். ஏ பரீட்சையில் ஆள்மாருட்டம் செய்ததாகவும் அதற்கான சதியில் ஈடுபட்டதாகவும் மூன்று பிரபல்யமான கல்லூரிகளைச் சேர்ந்த ஒரு துணைபேராசிரியர், இரண்டு ஆசிரியர்கள், ஒரு மனேஜர், ஒரு முன்னுள் ஆசிரியர் மற்றும் பலர் கைது செய்யப்பட்டனர்.

### பொலிசாருக்கு விருதுகள்

தமிழ் நாட்டில் பொலிசார் 25 பேருக்கு அவர்களின் வீரச் செயல்களைப் பாராட்டுவதற்காக திரு. அண்ணுதுரையின் பிறந்த தினமான செப்டம்பர் 15-ம் திகதி விருதுகள் அளித்து கௌரவிக்கப்படும். இதற்கு தமிழக முதல்வர் விருது என்று பெயர்.

### தி. மு. க. கருத்தரங்கு

தி. மு கழகத்தின் இரு தினமாநில கருத்தரங்கு திருச்சியில் ஆரம்பமாகியது. கழகத்தின் பல தலைவர்களும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினுர்கள்.

### கே. ஆர். விஜயா

நடிகை கே. ஆர் விஜயா தமது கணவருடன் சுவிட்சர்லாந்து நாட்டுக்கு உல்லாசப் பிரயாணம் போய் இருக்கிறுர்.

கே. ஆர். விஜயா தமது கணவர் தொழில் அதிபர் வேலாயுதத்துடன் குவைட், இத்தாலி, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குப் போகவிருக்கிறுர்.

### மொரார்ஜி சென்னை விஜயம்

இம்மாதம் 10-ம் திகதி சென்னைக்கு திரு. மொராஜி தேசாய் வருகிறுர். சென்னையில் பல நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொள்வார்.

### கிரிக்கு வரவேற்பு

புதிய ஜனதிபதி திரு. வி வி. கிரிக்கு சென்னை நகரசபை வரவேற்பு கொடுக்க முடிவு செய்திருக்கின்றது இம் மாதம் 15-ம் திகதி இந்த வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறும் என்று மேயர் வேலூர் நாராயணன் அறிவித்திருக்கிறுர்.

### கலெக்டர்கள் மகாநாடு

இம்மாதம் 10-ம் திகதி சென்னையில் கலெக்டர்கள் மகாநாடு நடைபெறும். தமிழ்நாடு உணவு நிலைமை பற்றி மகாநாட்டில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படும். இத்தகவலை உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் தெரிவித்தார்.

### பிராந்தி வைத்திருந்த பெண்

ரம்பிரியா என்ற பெண் மாம்பலம் கண்ணம்மா பேட்டையில் 20 போத்தில் பிராந்தி வைத்திருந்தார் இவரைப் பொலிசார் கைது செய்தனர் இவருக்கு 6 மாதம் கடுங்காவல் தண்டனையும் ரூபா 500 அபராதமும் விதிக்கப்பட்டது.

### லாட்டரி மோசடி

தமிழக லாட்டரி சீட்டில் நம்பரை திருத்தி பரிசு பெற முயன்ற ஒருவருக்கு 2 வருடம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

உடவளவை

# வலதுகரைத் திட்டம் அக். 1-ல் ஆரம்பம்

கொழும்பு, சனி

33 ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு நீர்ப்பாசன வசதியளிக்கக் கூடிய உடவழவை வலது கரை திட்டம் அக்டோபர் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்து வைக்கப் படும்.

இந்தத்திட்டத்தைப்பற்றி ஆராயவும், ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபடவுமென வெளிநாட்டு நிபுணர் குழுவொன்று விரைவில் இலங்கை வரவிருக்கின்றது.

இத்திட்டம் செயல்படுத்தப் படுவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே சாதகமாக கருத்துத்தெரிவித்திருக்கிறது. இந்தத் திட்டம் பூர்த்தியாகும் போது சுமார் 33 ஆயிரம் ஏக்கர் நிலம் விவசாயத்துக்குள்ளாகும் இதன் மூலம் சுமார் 3 ஆயிரம் விவசாயிகள் பயனடைவார்கள்.

## வீட்டை விட்டு சென்றவர்கள் கைது

மட்டுவில், சனி

வீட்டை விட்டு ஓடிய ஒரு காதல் ஜோடியை சுன்னுகத்தில் ஒரு வீட்டில் வைத்து சாவகச்சேரிப் பொலிசார் கைது செய்தனர்.

சாவகச்சேரி பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒரு சிறு கிராமவாசியான யுவதியை இரவோடு இரவாக சுன்னுகம் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த கதிரமலை என்பவர் கடத்திச்சென்றிருந்தாராம். சென்ற செவ்வாய்க்கிழமை இரவு இருவரும் தமக்குரிய சில பொருட்களுடன் வீட்டை வீட்டுச் சென்றதாகவும் யுவதி பெற்றேருக்கு ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டுச் சென்றிருந்ததாகவும் குறிப்பிட்ட கடிதத்தைத் தொடர்ந்து பெற்றேர் சுன்னுகம் சென்று பார்த்தபோது அவர்கள் அங்கு இருப்பதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. பெண் பெற்றேர்களுடன் அனுப்பி வைக்கப்பட்டார்.

## குறைதீர்ந்தது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கோட்டைக்குள் இருக்கும் விளையாட்டு மைதானத்தில் விளையாடும் வீரர்களுக்கு இதுவரை இருந்துவந்த கஷ்டம் நீங்கியுள்ளது. இம்மைதானத்தில் விளையாடும் வீரர்கள் விளையாட்டு முடிந்து

வடமராட்சியில்

## விவசாய விருத்திக்கு அணை

பருத்தித்துறை, சனி

கரவெட்டி மேற்கு பயிர்ச்செய்கைக் குழுவின் முயற்சியால் விராலி வீதி தொடக்கம் பட்டியோடைவரை ஓர் அணைக்கட்டுக் கட்டுவதற்காக ரூபா 10,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சவர்ச் சென்னெரு அணைக்கட்டு என்ற பெயருடன் அழைக்கப்படும் இவ்வணைக்கட்டுக்கான பூர்வாங்க வேலைகளை கமத்தொழிற்சேவை இலாகா ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது.

தம்பளைக்கடல் விஸ்தாப்புத்திட்டம்பற்றி உபசபாநாயகர் திரு, மு. சிவசிதம்பரம், சாவகச்சேரி எம் பி. திரு. வி. என். நவரத்தினம், கமத்தொழிற் சேவையாளர் திரு, க. சபாரத்தினம், கரவெட்டி கிழக்குப் பயிர்ச்செய்கைக் குழுவினர் ஆகியோர்கொண்ட குழுவினரின் கூட்டுப் பரிசீலனையின்படி தற்காலிகமாக மேற்கண்ட தொகைஒதுக்கப்பட்டதென்றும் உடுப்பிட்டி-சாவகச்சேரித் தொகுதிகளுக்கிடைப்பட்ட பகுதியில் உள்ள இக்கடல் ஆழமாக்கப்பட்டு, விஸ்தரிக்கப்படுவதால் இரு தொகுதி விவசாயிகளும் பெரும் பயனடையமுடியுமென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. வடமராட்சி, தென்மராட்சி பிரிவுகளிலுள்ள வேலையற்ற வாலிபர் இவ்வேலைகளில் ஈடுபடுவரென்றும், அவர்களுக்கு உணவும், சம்பளமும் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

## வித்தியாலய அதிபர்களுக்கு உத்தரவு

பருத்தித்துறை, சனி

நேற்று முன்தினம் வெளிவந்த க. பொ. த. (உயர்தர) கலைப் பகுதி முடிவுகளைத் தொடர்ந்து மேற்படி வகுப்புகளில், முக்கியமாக விஞ்ஞானப் பகுதி வகுப்புகளில் மே மாதம் 1970-ம் ஆண்டுக்குமுன் மாணவர் எவரையும் சேர்க்கக்கூடாதெனக் கல்விப் பகுதி சகல மத்திய மகாவித்தியாலய அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது. இதன் விளைவாக சம்பந்தப்பட்ட மாணவர் எட்டு மாத காலம்வரை எவ்வித பாடசாலைக் கல்வியுமின்றியிருக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

## வாலிபர் தற்கொலை

மல்லாகம், சனி

வெளியூர் சென்று கடை

# இந்தியகாங்கிரஸ்கட்சிக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏற்றுக்கொள்ளச் சம்மதம்

பிரெஸிலியா, செப் 6 கடத்திச் செல்லப்பட்ட அமெரிக்க தூதரை விடுவிப்பதற்கு கலகக்காரர்கள் விடுத்த நிபந்தனையை பிரேஸில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

அமெரிக்கத் தூதரை புரட்சிவாதிகள் நேற்று முன்தினம் அவர் அலுவலகத்துக்குப் போய்க் கொண்டிருக்கையில் வழிமறித்து கடத்திச் சென்றார்கள்.

பிரேஸில் அரசாங்கம் கைது செய்து வைத்துள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்தால் மட்டுமே அமெரிக்கத் தூதரை விடுவிக்க முடியும் என்றும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டதாக சர்வதேச வானொலிகளில் அறிவிக்கப்பட்டால் மட்டுமே இதுசாத்தியமாகும் என்றும் புரட்சிவாதிகள் அறிவித்திருந்தனர். இந்த நிபந்தனையை பிரெஸில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அரசியல் கைதிகள் 15 பேரை விடுவிக்க இணங்கியிருக்கின்றது.

தமிழ்நாட்டில்

## சி. சுப்பிரமணியத்துக்கு எதிர்ப்பு வலுக்கிறது

சென்னை, செப். 6 இந்திரா கருத்தை சுப்பிரமணியம் ஆதரிப்பது திகைப்பைத் தருகிறது என்று சுப்பிரமணியத்திற்கு வட சென்னைக் காங்கிரஸ் கமிட்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

வட சென்னை மாவட்ட காங்கிரஸ் ஊழியர் கூட்டம் எஸ் ஜி விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

ஜனதிபதித் தேர்தலையொட்டிக் கட்சிக்குள்ளாக நிலவிவந்த குழப்பத்திற்கும் சீர்குலைவிற்கும் ஒரு முடிவினை உருவாக்கும் வகையில் டில்லியில் கூடிய காரியக் கமிட்டி ஒருமனதுடன் ஒற்றுமைத்தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

கட்சியின் வளர்ச்சிக்கு ஒற்றுமை அவசியமா? கட்டுப்பாடு அவசியமா? என்ற கேள்வி மேலோங்கி வலுத்த போது ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை என்பதனை எல்லோரும் உணர்ந்தாலும், இன்றைய நிலையில் நடந்தவைகளை மறந்து முதலில் ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டுமென இரண்டே கருத்துடன் தலைவர்கள் முற்பட்டுள்ளனர்.

ஜனதிபதித் தேர்தலையொட்டி எழுந்துள்ள பிரச்னைகளுக்கு நமது உணர்ச்சிகளை நல்ல முறையில் பிரதிபலித்து வந்திருக்கிறோம். காரியக் கமிட்டி கூடி ஒருமனதான முடிவு எடுத்த பின்னர் பல வகைகளில் விமர்சனம் செய்வதோ, அறிக்கைகள் மூலம் கட்சியின் தோற்றத்தை அழிக்க முற்படுவதோ தவிர்க்கப்படவேண்டும். இதுவே நமது நோக்கம்.

ஊழியர்களைப் பொறுத்தவரை நமது இந்த நம்பிக்கை வீண்போகவில்லை. ஆனால் மேல்மட்டத் தலைவர்கள் சிலர் சர்ச்சைக்குரிய பிரச்னைகளைக் கிளப்பிவருவது வேதனை அளிக்கிறது. தற்சமயம் பிரதமர் இந்திரா தெரிவித்துள்ள ஒரு கருத்து நம் கவனத்தைப் பெரிதும் தூண்டுவதாக உள்ளது.

பிரதமருக்குக் கட்சித் தலைவர் ஆலோசனை வழங்கிடவோ, கலந்து பேசி கருத்துத் தெரிவிக்கவோ அதிகாரம் இல்லையெனவும், பிரதமர் தன் இஷ்டப்படி காரியங்களைச் செய்யப் பூரண அதிகாரம் இருப்பதாகவும் இந்திரா கூறியுள்ளார். இது நம்மைச் சிந்திக்கவைக்கிறது.

கட்சியின் மூலம் பதவி பொறுப்புக்களை பெறுகின்றவர்கள் பின்னர் கட்சியின் ஆலோசனை தேவை இல்லை என்பது பெற்று, பேணி வளர்த்த தாய்-தந்தையரை புறக்கணிப்பது போலவும் ஏறி வந்த ஏணியை உதைத்து தள்ளுவது போலவுமே எண்ண இடம் கொடுக்கிறது.

இந்நிலையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சுப்பிரமணியம் பிரதமரின் கருத்தை ஆதரித்து சொல்லி இருப்பது நம்மை எல்லாம் திகைக்க வைக்கிறது.

சுப்பிரமணியம் சொல்லிய கருத்துக்கள் அவரின் சொந்த அபிப்பிராயங்களே அன்றி தமிழ் நாடு காங்கிரஸ் கருத்து அல்ல. கட்சித் தலைவருக்கு கட்சியின் உறுப்க விளங்கும் சகல அமைப்புக்களையும் முறைப்படுத்தவும் ஆலோசனை வழங்கவும் பூரண அதிகாரம் இருக்க வேண்டும்.

இம்மாதிரி விஷயங்களில் பொதுக்குழு கூடி விவாதித்து முடிவு காணுவதே முறையானதாகும். ஆகவே தமிழ்நாடு காங்கிரசின் பேரவைக் கூட்டம் உடனடியாக கூட்டப் பெற்று இது குறித்து விவாதம் நடத்த வேண்டும்.

## நேபாள மன்னர்

புதுடில்லி, செப். 6 நேபாள மன்னர் மகேந்திராவும், இராணிரத்னவும் லண்டன் செல்லும் வழியில் இந்தியா வந்து சேர்ந்துள்ளனர். மன்னர் மகேந்திரனுடன் திருமதி காந்திபேச்சுவார்த்தைகள் நடத்தினர் ஜனதிபதி கிரி மன்னர் தம்பதிகளை வரவேற்றார்.

## செக் அதிகாரிகள் மீது நடவடிக்கை

பிராக், செப், 26 செக்சோஸ்லவாக்கியாவில் தாராளக்கொள்கைக்கு காரணமாக விருந்தவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

ரஷ்ய ஆக்கிரமிப்பிற்கு முன்னர் வினியோகிக்கப்பட்ட ஓர் அறிக்கையை வாபஸ் பெறுவதற்கு மறுத்ததின் பேரில் 300 அதிகாரிகள்மீது செக்கோஸ்லவாக்கிய அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது.

தாராளக்கொள்கையாளர்கள் என்றுகண்டித்து வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் டுப்செக்கின்பெயர் குறிப்பிட்டிருக்கவில்லை.

## குரங்கு வேட்டை

மட்டுவில், சனி இப்பகுதி விவசாயிகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து சாவகச்சேரி நகரசபை குரங்கு வேட்டைக்குத் தயாராகியுள்ளது. இப்பகுதியிலுள்ள வயல்களிலும் வளவுகளிலும் உள்ள பயிர்களை குரங்குகள் அளிப்பதாக இப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்ததைத் தொடர்ந்தே குரங்குகளை விரட்டுவதற்கான நடவடிக்கையில் நகரசபை ஈடுபட்டுள்ளது.

# இந்தியகாங்கிரஸ்கட்சிக்குள் கம்யூனிஸ்ட் ஊடுருவல்

## நிஜலிங்கப்பா கூறுகிறார்

பெங்களூர், செப் 6 காங்கிரஸ் ஸ்தாபனத்திற்குள் கம்யூனிஸ்டுகள் ஊடுருவல் செய்திருக்கிறார்களென எனக்குத் தோன்றுகிறது. ஆனால், பெரும் அளவில் ஊடுருவல் நடந்திருப்பதாக நினைக்கவில்லை. இருந்தாலும் ஸ்தாபனத்தில் கம்யூனிஸ்டுகள் பொறுப்புள்ள பதவிகளில் வந்துவிடாமல் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா எச்சரித்தார்.

எல்லா மட்டங்களிலுமே இந்த ஊடுருவல் ஏற்பட்டிருப்பதாக நிஜலிங்கப்பா சொன்னார்.

பிரதம மந்திரி கம்யூனிஸ்டா அல்லது கம்யூனிஸ்ட் அனுதாபியா என்று ஒருநிருபர் கேட்டார்;

அப்படி நினைப்பதற்குக் காரணமில்லை என்று அவர் பதிலளித்தார்.

கேள்வி: கம்யூனிஸ்டுகள் எப்படி காங்கிரசுக்குள் வந்தார்கள்.

பதில்! இதென்ன பிரமாதம். நாலணா சந்தா செலுத்தினால் யார் வேண்டுமானாலும் காங்கிரஸ் மெம்பராகி விடலாமே,

கேள்வி: அவர்களை எப்படிப் பிரிக்கப்போகிறீர்கள்,

பதில்: இதை ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டும். அவர்கள் ஸ்தாபனத்தில் பொறுப்புள்ள பதவிகளுக்கு வந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கம்யூனிஸ்டுகளுக்கு ஜனநாயக சோஷலிஸத்தில் நம்பிக்கையிருந்தால் தாராளமாக அவர்கள் வரட்டும். ஆனால் காங்கிரசைச் சீர்குலைப்பதற்காக அவர்கள் வருகிறார்களென்றால் உஷாராயிருக்கவேண்டும். ஆனால் மைசூர் சம்பந்தப்பட்ட வரையில் கம்யூனிஸ்ட் ஊடுருவல் பிரச்னையே இல்லை.

ஜனநாயகத்திற்குவிரோதமான எந்த ஸ்தாபனத்தையும் அனுமதிக்கக்கூடாதென்று அவர் கூறினார்.

இதை அவர் விளக்கமாகக் கூறவில்லை. ஆனால் நாட்டில் ஜனநாயகம் செயல்படுவதற்குக் குறுக்கே நிற்கும் எந்த ஸ்தாபனமும் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கக்கூடாது என்றார்.

## புதிய கட்சியை வரவேற்கிறார்

ஜனநாயகம், சோஷலிசம் மதசார்பற்ற தன்மை ஆகியவைகளில் நம்பிக்கையுள்ள ஒரு புதிய அரசியல் கட்சி இந்தியாவில் ஏற்படுவதை நிஜலிங்கப்பா வரவேற்கிறார்.

காங்கிரசுக்கு ஏற்ற ஒரு எதிர்க்கட்சி வேண்டுமென்று பத்து வருஷங்களாகக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி: அம்மாதிரி ஒரு கட்சி ஏற்பட்டால் அதில் நீங்கள் சேருவீர்களா?

பதில்: மாட்டேன். நான் ஒரு காங்கிரஸ்காரனாகவே சாக விரும்புகிறேன்.

கேள்: இன்றைய குழப்பத்தின் விளைவாக காங்கிரஸ் செத்துவிட்டால் என்ன செய்வீர்கள்?

பதில்: காங்கிரஸ் போன்ற உயிர்த் துடிப்புள்ள ஒரு ஸ்தாபனத்தில் கருத்துவேற்றுமைகள் இருக்கத்தான் செய்யும். ஆனால் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு முடிவு எடுக்கப்பட்டுவிட்டால் அது எதுவாயிருந்தாலும் நிறைவேற்றித்தானாக வேண்டும்.

எல்லோரும் சௌக்கியமாயிருக்கவேண்டும் என்பதே நம்முடைய சோஷலிசமாக இருக்கவேண்டும். எங்கோ வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்கிக் கொண்டு வந்த சோஷலிசம் நமக்கு வேண்டாம் என்றார்.

மொரார்ஜி விவகாரம் பற்றி கேட்டபோது டில்லிக்குப் போன பிறகு அது எந்த நிலைமையில் இருக்கிறதென்று பார்க்கவேண்டும் என்று அவர் பதிலளித்தார்.

## சோஷலிசம் பற்றி விளக்கம்

பெங்களூர், செப். 4 சோஷலிசம் பற்றிய தமது விளக்கத்தை இன்று நிஜலிங்கப்பா பத்திரிகை நிருபர்களிடையே கூறினார்.

தனியார்துறை, பொதுத்துறை ஆகியவற்றுக்கிடையே சுயேச்சையான போட்டி இருக்கவேண்டும் என்று அவர் கூறினார்.

முக்கியமானது என்னவென்றால் செல்வம் அதிகரிக்க வேண்டும்; செல்வந்தர்கள் அல்ல என்று அவர் சொன்னார்.

சிறு விவசாயிகளுக்கும், தொழிலதிபர்களுக்கும் கடன் அளிப்பதில் தேச உடமையாக்கப்பட்டுள்ள வங்கிகளுடன் போட்டியிடுமாறு தேச உடமையாகாத சில வங்கிகளின் அதிகாரிகளிடம் தாம் கூறியதாக நிஜலிங்கப்பா தெரிவித்தார்.

ஒவ்வொருவரும் கூடுதலாக ஒரு சுஜம் துணி வாங்கக்கூடிய சக்தியைப் பெறுவார்களானால் நாட்டில் ஏராளமான மில்களை துவக்க முடியும் என்றும், அதன் மூலம் பொருளாதார வடிவத்தையே மாற்ற இயலும் என்றும் நிஜலிங்கப்பா கூறினார். தமது கருத்துக்கு ஆதாரமான கொள்கை இதுதான் என்று அவர் சொன்னார்.

ட்டு மைதானத்தில் விளையாடும் வீரர்களுக்கு இதுவரை இருந்துவந்த கஷ்டம் நீங்கியுள்ளது. இம்மைதானத்தில் விளையாடும் வீரர்கள் விளையாட்டு முடிந்து தாக சாந்தி செய்து சிரம பரிகாரம் செய்து கொள்ள இயலாதிருந்து வந்தது யாழ்ப்பாணம் சிறைச்சாலையைச் சேர்ந்த திரு. எம்ஸி. நல்லநாதனின் முயற்சியால் இப்பொழுது இங்கு ஒரு சிற்றுண்டிச்சாலை திறக்கப்பட்டுள்ளது. சிறைச்சாலை அதிகாரி திரு. ஜான்சன் இச்சிற்றுண்டிச்சாலையைத் திறந்துவைத்தார். (தே. நி)

## விசாரணை நடத்த கோரிக்கை

அளவெட்டி, சனி கட்டுவனில் உள்ள ஒரு வாசிகசாலையில் பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த சிலரை சுன்னாகம் பொலிசார் தாக்கியது சம்பந்தமாக உடன் விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தெல்லிப்பளை தமிழரசுக் கிளை இணைச்செயலாளர் திரு. க. சிவபாலசுந்தரம் திரு. எஸ், ஜே. வி. செல்வநாயகத்தைக்கோரியுள்ளார்.

## வாலிபர் தற்கொலை

மல்லாகம், சனி வெளியூர் சென்று கடையில் நின்று சம்பளத்திற்கு கடமையாற்ற பெற்றோர் சம்மதமளிக்காததையிட்டு மனமுடைந்து 17 வயதான வாலிபர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இச்சம்பவம் குரும்பசிட்டியில் நடைபெற்றுள்ளது. பரிதாபகரமாக மரணமானவர் வைரமுத்து பரமலிங்கம் என்ற நபராகும்.

இவரின் திடீர் மரணம் குறித்து சடுதி மரணவிசாரணை அதிகாரி திரு. என். நாகலிங்கம் விசாரணை நடாத்தினர். காங்கேசன்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் மாணிக்கம் பிரேத பரிசோதனை நடாத்தினர். காங்கேசன் துறைப் பொலிஸார் ஆஜர் செய்த ஏ. வைரமுத்து, பீ. சரோஜினிதேவி, வீ. பூரணம் ஆகியோர் விசாரணையின் போது சாட்சியமளித்தனர்.

தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. மரணமான நபர் அயல்வீட்டு பிருந்தையில் இறந்திருக்கக் காணப்பட்டார்.



சந்திரனில் இறங்கிய அப்பல்லோ-11 வீரர்கள் அமெரிக்கக் கொடியை சந்திரத் தரையில் நாட்டினர்கள் அல்லவா. அந்த நிகழ்ச்சியைக் காட்டும் படம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

சத்தியத்தையும் அன்பையும் உபாசிப்பவன் நாளைக்காக ஒன்றும் சேமித்து வைக்கமாட்டான்.
— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், சௌமிய வருஷம் ஆவணி மாதம் 22-ந் திகதி (7 - 9 - 69)


## நீதியற்ற தண்டனை

தேசிய ஆசிரியர் சங்கத்தின் காரியதரிசி திரு. இ. சிவனேசனும், துணைத் தலைவர் திரு சந்தியாப்பிள்ளையும் நியாயமற்ற முறையிலே திடீரென வெகுதூரத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இங்கு பொதுவாக ஆசிரியர்கள் அனைவருக்கும் கவலையும் மனக்கசப்பும் அளித்துள்ளது.

மேற்குறித்த இவ்விரு ஆசிரியர்களும் இந்தத் தண்டனை பெற அவர்கள் செய்த குற்றம் என்னவென்பதையும் அதிகாரிகள் தெரிவிக்கவில்லையாம். கொலைக் குற்றம் செய்தவனுக்கும்கூட பாரபட்சமற்ற விசாரணை நடத்திய பின்பே நீதிமன்றத்தில் தண்டனை விதிப்பது முறை. மேலான கல்விப் பணியில் ஈடுபட்டுள்ள இவ்விரு ஆசிரியர்களும் ஏதாவது தவறு செய்திருப்பின், அதை அவர்களுக்குத் தெரிவித்து அவர்களது விளக்கங்களையும் கேட்டு, பாரபட்சமற்ற முறையில் விசாரணை நடத்தி, பின்னர் அவர்களைத் தண்டித்திருப்பின் இதைப்பற்றி யாரும் குறைகூற முடியாது. ஆனால் செய்தகுற்றம் என்னவென்று சொல்லாமல், கல்வி அதிகாரிகளே குற்றம் சாட்டி, விசாரணை எதுவும் செய்யாமல், அவர்களே தண்டனையும் விதிப்பதாயின் அது சகிக்கமுடியாத பெரிய கொடுமையாவதுடன், அரசாங்கத்தின் மீது பொது மக்களின் நம்பிக்கையையும் அபிமானத்தையும் குலைப்பதாக இருக்கும்.

இவ்விரு ஆசிரியர் விஷயம் பிரதம மந்திரிவரை சென்றுள்ளது. ''அரசாங்கத்தின் கொள்கையை மீறியதற்காக மாற்றப்பட்டார்கள்'' என்று யாழ்ப்பாண பிரதிநிதிக்கு, பிரதமர் எழுதியுள்ள பதிலில் காரணம் கூறப்பட்டுள்ளதாம். அரசாங்கத்தின் என்ன கொள்கை எவ்விதம் மீறப்பட்டதென்ற விபரமும் அதில் இல்லை. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு குற்றச்சாட்டின் விபரம் தெரி

ஆட்சிமன்றத்திலும் பத்திரிகை வாயிலாகவும் கல்வி அமைச்சர் விளக்கியுள்ளார். பல ஆசிரிய சங்கங்கள் இந்த சீட்டு விற்பனையைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன. அப்படியிருக்க, இவ்விரு ஆசிரியர்கள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க என்ன காரணம்?

ஆசிரியர் சங்க நிர்வாகிகளான இவ்விரு ஆசிரியர்களைத் தனிப்படுத்தி அவர்களுக்கு இந்ததண்டனை விதித்தது, தொழிற்சங்கத்தின் மீது பழிவாங்கும் நடவடிக்கையாகுமென்றும், ஆசிரியர் சங்கம் கருதுவதில் அதிக நியாயமுண்டு 45 வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதில்லை என்று நியதி இருக்க 54 வயதான ஓர் ஆசிரியரை இவ்விதம் தண்டித்திருப்பது அரசாங்கத்தின்மீது ஆசிரிய உலகத்துக்கு நம்பிக்கையில்லாமற் செய்வதாகும். மேலும் ஆசிரியர்களை இவ்விதம் திடீர் திடீரென்று எக்காரணம் பற்றியும் மாற்றுவதால் அவதிப்படுபவர்கள் மாணவர்களே. ஆகவே இது உண்மையில் ஒரு பாவமுமறியாத மாணவர்களையே தண்டிப்பதாகும்.

அரசாங்கம் பல பள்ளிக்கூடங்களைக் கையேற்றபோது பல ஆசிரியர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். ஒரு சில புதிய சலுகைகள் அவர்களுக்குக் கிடைத்தனவென்றாலும் தங்களை எல்லாம், இதன்மூலம் அடிமைகளாக்கிவிட்டதையும் கல்வி அமைச்சர் ஒரு சர்வாதிகாரியாகிவிட்டதையும் பார்க்கையில், ஆசிரியர்கள் எல்லோரும், பழைய நிலையே மேலென்று கருதும் நிலை ஏற்பட்டுள்ளது. பணத்தைவிட ஒருவருக்கு சுதந்திரமும், தன்மானமுமே அதிக முக்கியமாகும்.

இவ்விஷயமாக அரசாங்கத்தின் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்க, ஆசிரியர் சங்கத்தார் தீர்மானிக்

# பொதுசன சேவையாளர் வெகுமதிகளை ஏற்கலாமா?

## மகாத்மா பதில் தருகிறார்

ஓராண்டு சேவைக்கென 1893-ம் ஆண்டு தென்னாபிரிக்காசென்ற காந்தி 1899இல் இந்தியா திரும்பியதையும், இந்தியா திரும்பிய ஆறு மாதங்களில் அவர் திரும்பவும் அவசரமாக அழைக்கப்படவே இரண்டாண்டுகளுக்குப் பின்னர் 1901-ல் அவர் திரும்பவும் தாய்நாடு திரும்பினார். ஓர் ஆண்டிற்குள் தென்னாபிரிக்க இந்தியர் சமூகம் விரும்பினால் தென்னாபிரிக்காவுக்குத் திரும்பிவிட காந்தி தயாராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் காந்தியை தென்னாபிரிக்க இந்தியர்கள் அவரை தாய்நாடு திரும்ப அனுமதித்தனர். நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டு காந்தி தாய்நாடு திரும்ப ஆயத்தமானார்.

இந்த வேளையில் அவருக்கு ஒரு கடுமையான சோதனை ஏற்பட்டது. சோதனை கஷ்டங்கள் உருவத்தில்தான் வரவேண்டும் என்பதில்லை பொருள்கள், மகிழ்ச்சிதரும் புகழ்ச்சி வெகுமதிகள், உருவங்களிலும்கூட வரக்கூடும். காந்திக்கு விலை உயர்ந்த வெகுமதிகள் உருவத்தில் அந்த சோதனை குறுக்கிட்டது. காந்திக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசாரத்தில் ஏராளமான வெள்ளி, தங்கச் சாமான்கள் அன்பளிப்பாக வந்து குவிந்தன அந்த அன்பளிப்புகளில் விலையுயர்ந்த வைரச்சாமான்களும் இருந்தன. அவற்றில் ஒன்று 52 பவுன் எடையுள்ள தங்கச் சங்கிலி. அது திருமதி கஸ்தூர் பாபுவுக்கென்று அளிக்கப்பட்டது. இத்தனையும் சேர்ந்து ஒருபெரியசோதனையாக காந்தியின் முன் வினாக்குறியாக நின்றது.

''இந்த வெகுமதிகளையெல்லாம் ஏற்றுக்கொள்ள எனக்கு என்ன உரிமை இருக்கிறது? இவற்றை எல்லாம் வாங்கிக்கொண்டபிறகு, ஊதியம் பெறாமல் சமூகத்துக்குச் சேவைசெய்ய வந்திருப்பதாக நான் எண்ணிக்கொள்வது எப்படி?'' என்ற வினாக்களை இந்த வெகுமதிகள் காந்தி முன்னால் எழுப்பின. மற்றவர்கள் காந்தியின் சமூகசேவையை பாராட்டித் இந்த வெகுமதிகளை அளித்திருந்த போதிலும் ''நான் அவ்வாறு எண்ணிக் கொள்ளுவது எப்படி?'' என்பது தான் காந்

ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். காந்திக்கு அப்போது வயது 32 நல்ல நடுத்தர வயது. இல்லறத்தின் மையமான கட்டத்திலிருப்பவர். பக்கத்தில் ஒத்த வயதுடைய மனைவி. சாதாரணமாக எல்லாப் பெண்களுக்கும் இருக்கும் நகை நட்டு ஆசையுடைய மனைவி! கூடவே, எதிர் காலத்தை நினைவூட்டும் குழந்தைகள்! இவற்றுக்கு மத்தியிலே அந்த மனிதருக்குள்ளே ''மகாத்மா'' உருவாகிக் கொண்டிருக்கிற கட்டம் ஆகவே சோதனை கடுமையாக இருந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

'' அன்று இரவெல்லாம் என்னால் தூங்கமுடியவில்லை. என் அறையில் அங்கு மிங்கும் இரவெல்லாம் உலவினேன். தீவிரமாகச் சிந்தித்தேன். ஆனால் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. ஆயிரக் கணக்கில் மதிப்புள்ள இந்த வெகுமதிகளை வேண்டாம் என்று துறந்து விடுவது எனக்கு கஷ்டமாக இருந்தது அவைகளை வைத்துக் கொள்ளுவதோ இன்னும் அதிகக் கஷ்டமாக இருந்தது.'' என்று அவர் ''சத்தியசோதனை''யில் கூறியுள்ளதிலிருந்து அச்சோதனையின் கடுமையை ஒருவாறு நம்மால் உணர முடிகிறது.

இந்த சோதனையில் தம்மைப் பொறுத்தவரை




வெற்றிகரமாகத் தேறினார். இந்த வெகுமதிகளை எல்லாம் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும். இவற்றையெல்லாம் சமூகத்திற்கே சொந்தமானதாக்கி விட வேண்டும் என்றும் காந்தி ஒரு முடிவுக்கு வந்து விட்டார். இந்த ஏற்பாட்டுக்கு கஸ்தூரிபாவைச் சம்மதிக்கச் செய்வதில் சிரமம் இருப்பதையும் அவர் அறிவார்.

இது விஷயமாககாந்தி கஸ்தூர்பாவைத் தமது முடிவை ஏற்றுக்கொள்ளுமாறுசெய்ய அவர் மேற்கொண்ட முயற்சிகளும் விவாதங்களும் ஒரு சிறந்த நாடக இலக்கியமாகவே சத்திய சோதனையில் அமைந்திருக்கின்றன. அதை இங்கு விவரிக்கமுயல்வது சுவையற்றதாகிவிடும். ஏனெனில் அதை ஒவ்வொருவரும் மூலத்தைப் படித்துத்தான் இன்புறவேண்டும் அக்காலத்தில் காந்திக்கு பிரசவ வேதனையளித்த இந்த சோதனையில் பிறந்த அந்த நிகழ்ச்சி சத்திய சோதனை நூலில் இன்பமான புனிதமானநமது மனோபாவனையை உயர்த்தும் ஒரு அழகான காட்சியாக அமைந்திருக்கிறது. அதை எல்லோரும் அவசியம் படிக்க வேண்டும்.

இந்த அழகான காட்சியின் இறுதியில் ''பொதுஜன சேவையில் ஈடுபட்டிருப்பவர்கள் விலையுயர்ந்த வெகுமதிகளை ஏற்றுக்கொள்ளவே கூடாது என்பது என்னுடைய திடமான கருத்து'' என்று தமது சத்தியசோதனையைப் பதிவுசெய்யும் காந்தியடிகளிடம் நமக்குப் பணிவும் மரியாதையும் ஏற்படாமலிருக்க முடியுமா: அவர் முன்னால் நாம் எத்தனை சின்னவர்கள்என்பதும் தெளிவாகாமலிருக்க முடியுமா?

வீ செல்வராஜ்

# நாடற்றவர்கள் பயந்துபோய் வீதிக்கே வரமாட்டார்களாம்

## முன்னர் இருந்த நிலை பற்றி கிளிநொச்சி எம். பி விளக்கம்

[...]வு செலவுத் திட்டத்தில் பிரதம மந்திரி[...]ன் இலாகாவுக்கு பணவொதுக்கப் பிரேரணைமீது கிளிநொச்சி எம். பி. திரு. [...]பொ. இரத்தினம் பேசியதில் ஒரு பகுதி நேற்று வெளியாயிற்று. அதன் மிகுதிப் பகுதி இது.

கள் சொல்வதிலுள்ளநீதியை உணர்ந்து அவர்கள் நடந்திருக்கிறார்கள்.

ஒருகாலத்திலே அமைச்சரொருவர் எனது தொகுதிக்கு வந்தபொழுது என்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐயாறன் எழுதுவது

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திருச்சியிலிருந்து விமானமூலம் வரும் ஒருவரைப் பார்க்க பலாலி விமான நிலையத்திற்குச் சென்றேன். மாலை 5-40க்கு வரவேண்டிய விமானம் இரவு 7-50க்குத்தான் அதாவது இரண்டு மணி நேரத்துக்குமேல் தாமதமாகவந்து சேர்ந்தது. இதனால் அங்கு பலருக்கும் எவ்வளவு சங்கடமென்பதை விளக்கத் தேவையில்லை.

'ஏர்ஸிலோன்' விமானத்தார் சென்ற மாதம் புதிய நேர அட்டவணையை அமுலுக்குக் கொண்டுவந்தபிறகு பலநாட்கள் இவ்வித தாமதம் ஏற்படுவதாகத் தெரிகிறது. தாமதத்துக்குக் காரணம், ஒரே விமானம் காலையிலே கொழும்பிருந்து திருச்சிக்குநேரேசென்றுபின் அங்கிருந்து கொழும்புக்கு திரும்புகிறதுபின்னர்அதுவே அர்பாறைக்குச் சென்று கொழும்புக்குத் திரும்பி, அதன்பின், நேரே மாலையில் திருச்சிக்குப் பறந்துசென்று பின்னர் யாழ்ப்பாணம் வழியாக கொழும்புக்குத் திருப்பவேண்டியுள்ளது, விமானத்தில் பழுது ஏற்பட்டதாகக் கூறி கொழும்பிலே பலமணி நேரம் தாமதித்து சரிபார்த்தபின் அனுப்புவதால்தான், இவ்வித தவக்கம் ஏற்படுவதாயும், இந்தத் தாமதத்தால், பலருக்கு 'ஓவர்டயம்' கிடைப்பதால் விமானத்துக்கு அடிக்கடி ''பழுது'' ஏற்படுவதாகவும் ஓர்அன்பர்கூறினார். இதைப் பற்றி விமானசேவைத் தலைவருக்கு ஒரு பிரமுகர் கடுமையான கண்டனக் கடிதத்தை அங்கிருந்தே எழுதினார்.

'ஏர்ஸிலோன்' சேவையைப்பற்றி பலரும் பலவிதமாதக் கதைத்தனர். மூன்று 'மாடல்'களில் மூன்றே விமானம் இருப்பதாயும் இதற்கெல்லாம் மூன்றுவித இஞ்சினியர்கள், மூன்றுவித உதிரிகள் எல்லாம் தேவைப்பட்டு, செலவுகள் அதிகரிப்பதாயும், தலைவரும் அவரைச்சேர்ந்தவர்களும், லண்டனுக்கும் சிங்கப்பூருக்கும் அடிக்கடி இலவசமாக பிரயாணம் செய்வதாகவும் ஓரன்பர் பலத்த புகார்கள் கூறி, இந்தசேவை பெரு நஷ்டத்தில் நடப்பதாகச் சொன்னார்.

இதைப்பற்றி விசாரணை செய்து, நிலைமையை சீர் செய்ய தக்க நடவடிக்கையைப் பிரதமர் எடுக்கவேண்டும். பலாலி விமான நிலையத்தில் சில நல்ல அபிவிருத்திகள் ஏற்பட்டு வருவதைக் கண்டேன். வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன. பிரமுகர்கள் வருகையில் அவர்களை வரவேற்க கொழும்பைப்போல் பலர்லியிலும் விசேஷ ஒழுங்குகள் செய்ய வேண்டுமென்றும் கேட்டதற்கு நிலைய அதிபர் அதற்கான ஏற்பாட்டைச் செய்வதாகத் தெரிவித்தார்.

0 0 0

திருவிழாவுக்கு செல்கிறவர்கள் விபூதி பிரசாதம் வாங்காவிடினும், கடலைப் பட்டாணி வாங்கத் தவறுவதில்லை. குழந்தைகளுக்கு மட்டுமன்றி பெரியவர்களுக்கும்கூட கடலையில்தான் நினைப்பு.

இப்போது நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு அங்கு தெரு ஓரத்தில் பல கடலைக் கடைகளைப் பார்த்தேன், ஒரு கடைக்காரர் தமது கடலைப்பொரி முதலியவை பற்றி ''தமிழ் முழக்கம்'' என்ற புதிய ஏட்டிலே கவிதைமூலமே விளம்பரம் செய்திருந்ததைப் பார்த்ததும் வாயில் ஜலம்ஊறியது!

தமிழ்ச்செல்வனென்பவர் 'ஆணையிடுவோம் அன்னைத் தமிழ்மீது'' என்ற தலைப்புடன் எழுதியுள்ள உணர்ச்சி ததும்பும் ஓர் கட்டுரையில், தமிழ் இலக்கியச் சிறப்பினை நவரத்தினங்களாக வர்ணித்துள்ளார். பிறர் மீது துவேஷ வெறியைத் தூண்டிவிடாமல், ''தீதும் நன்மையும் பிறர்தரவாரா'' என்ற கட்டுரை அறிவுறுத்துவது வரவேற்கத்தக்கது.

0 0 0

கொல்வாரேனும் குணம் பல நன்மைகள், இல்லாரேனும் இயம்புவராயிடின், எல்லாத் தீங்கையு நீங்குவரென்பதால், நல்வார்நாமம் நமச்சிவாயவே
—திருஞானசம்பந்த சுவாமிகள்.

# அராலி வடக்குவிரைவில் ஒளிமயமாகும்

அராலி, வெள்ளி இத்திட்டத்தின்கீழ் பல

...லில் காரணம் கூறப்பட்டுள்ளதாம். அரசாங்கத்தின் என்ன கொள்கை எவ்விதம் மீறப்பட்டதென்ற விபரமும் அதில் இல்லை. சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு குற்றச்சாட்டின் விபரம் தெரிவிக்கப்படவில்லை. தங்கள் கட்சியின் நியாயத்தை எடுத்து விளக்கவும் அவர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. ஒருவருக்குத் தந்திமூலம் திடீரென மாற்றல் உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது. மற்றவருக்கு 13 நாள் முன்னறிவித்தலே தந்துள்ளனர். கண்யமான ஆசிரியர்பணியில் ஈடுபட்டுள்ளவர்களை இவ்விதம் ஒருதலைப்பட்சமாக தண்டித்திருப்பது ஒரு நாகரீக அரசாங்கத்துக்கு அழகல்ல.

'ஸியவாஸா' எனும் அதிர்ஷ்டச் சீட்டுகளை அவர்கள் விற்பனைசெய்ய மறுத்தது தான் அவர்கள்செய்த குற்றமென்று சொல்லப்படுகிறது. இச் சீட்டுகளை ஆசிரியர்கள் விற்கவேண்டுமென்ற கட்டாயமில்லையென்றும், இஷ்டப்பட்டவர்கள் தாங்களாக விற்பனை செய்யலாமென்றும் ...ருக்கு சுதந்திரமும், தன்மானமுமே அதிக முக்கியமாகும்.

இவ்விஷயமாக அரசாங்கத்தின் மீது நீதிமன்றத்தில் வழக்குத்தொடுக்க, ஆசிரியர் சங்கத்தார் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. அரசாங்கம் இதில் வென்றாலும், ஆசிரியர்களின் மனக்கசப்பை அது வளர்ப்பதாகவே இருக்கும். ஆகவே இதைப்பற்றி பிரதமர் உடன் தலையிட்டு இவ்விரு ஆசிரியர்களின் இடமாற்ற உத்தரவையும் உடன் ரத்துசெய்யவேண்டும். அத்துடன் ஆசிரியர்கள்மீது இனிஎழும்புகார்களைப்பற்றி விசாரித்து நடவடிக்கைஎடுக்க, தனிப்பட்ட ஒரு விசாரணைக் குழுவை நியமிக்கவேண்டியது அவசியமாகும். இவ்விதம் பிரதமர் தீர்க்கதரிசனத்துடன் செய்யின், பொதுவாக ஆசிரியர்களின் நம்பிக்கையை மீண்டும் பெறமுடிவதுடன் ஆசிரியர்களும் நிம்மதியாகக் கடமையாற்றவும், இதனால் கல்வி போதனையும் மேம்படவும் முடியும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## யாழ்ப்பாண மேயர்கள் பற்றி

### ஒரு விளக்கம்

கடந்த மாதம் 28-ம் திகதி நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் முன்னுள் மேயர்கள் செய்த சேவைகள் பற்றி நான் பேசிய பேச்சுச் சம்பந்தமாக வரியிறுப்பாளர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சந்தேகத்தை நீக்க ஒரு விளக்கத்தை இங்கு தர விரும்புகிறேன்.

திரு. ஆர். ஆர். நல்லையா நல்லதோர் நகரமண்டபத்தைஅமைத்துத்தந்தார்.

திரு சி. பொன்னம்பலம் குருநகர் வீடமைப்புத்திட்டத்தை ஆக்கிவைத்தார்.

திரு. சாம்சபாபதி நல்ல பொதுஜனநூல் நிலையத்தை அமைக்கப் பாடுபட்டார்.

திரு. டி. எஸ். துரைராஜா நல்லதோர் அழகான திறந்தவெளியரங்கை அமைத்துத் தந்தார்.

திரு. அல்பிரட் துரையப்பா அழகான வீதிகள் அமைத்துத் தந்ததோடு, விளையாட்டு அரங்கையும் அமைத்துத்தந்தார்.

தற்போதையமேயர் திரு எஸ். நாகராசா யாழ்ப்பாண நகரில் நவீனமார்க்கட்டைக் கட்டித்தருவார்.

இவ்வாறு நான் பேசியது எவரது மனதையும் புண்படுத்தும் நோக்கத்துடனல்ல. காலத்துக்காலம் பல மேயர்களும் செய்த சேவைகளையே இங்கு நான் தெரிவித்தேன்.

வி. சிவசுப்பிரமணியம்
23-ம் வட்டார அங்கத்தவர்
யாழ்ப்பாண மாநகரசபை.

0 0 0

## நாற்றமெடுக்கிறது

கோப்பாய் தெற்கு, கட்டைப்பிராய்ப் பகுதியில் பருத்தித்துறை வீதியில் இருக்கும் வட்டக்குளம் என்னும் சிறுகுளத்தில்மழைநீர் தேங்கி நிற்பதால் எவரும் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுகிறது. இதனால் இக் குளத்திற்கு மிகவும் அண்மையில் இருக்கும் பொதுமக்களும் வீதியால் செல்பவர்களும் மிகவும்அதிருப்தி அடைந்துள்ளனர். சுகாதாரத்திற்குப் பங்கமான முறையில் அமைந்திருக்கும் இக் குளத்தில் இருந்து ஏதேனும் நோய்கள் பரவக் கூடுமென்று மக்கள் அஞ்சுகின்றனர். இதனால் இதற்குப்பொறுப்பானவர்கள் பொதுமக்களின் நலத்தைக் கவனத்தில் கொண்டு தக்கநடவடிக்கை எடுத்து இந்த துர்நாற்றத்தைப் போக்கி மக்களின் அச்சத்தையும், கவலையையும் போக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இருஷ்ண
கோப்பாய், தெற்கு

சமூகசேவையை பாராட்டித் இந்த வெகுமதிகளை அளித்திருந்த போதிலும் "நான் அவ்வாறு எண்ணிக் கொள்ளுவது எப்படி?" என்பது தான் காந்தியின் மனச்சாட்சி எழுப்பிய வினு. தமக்குத் தாமே சத்தியமுள்ளவராக இருக்க விரும்பினுர் காந்தி இதில் தான் சத்தியத்தின் ஆணிவேரே இருக்கிறது. ஆகவே தான் "நான் எண்ணிக் கொள்ளுவது எப்படி?" என்று காந்தி தமக்குத் தாமே வினவுகிறுர்.

## மகாத்மா வாழ்க்கையில்...

எழுத்துக்களைக் கற்றுக் கொண்டதும், சுலபமாகச் சொற்களைப் படித்துப் பயிலுவதற்கு உதவியாக வர்ணப்படங்களுடன் குஜராத்தி முதற் பாடப் புத்தகம் ஒன்றை காகா சாகேப் தயாரித்து அதை குஜராத் வித்தியாபீடத்தின் பிரசுரமாக வெளியிட்டார். "புத்தகம் அழகாக இருக்கிறது. இதனுடைய விலை என்ன?" என்று கேட்டார் பாபு.

"ஐந்தணு."

"நல்லதோர் புத்தகத்தை நீங்கள் தயாரித்திருப்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனுல் ஏழை மக்களால் இதை வாங்கமுடியுமா? சாதாரண முதற்பாடப் புத்தகம் ஓரணுவுக்கு கிடைக்கிறது. தேசிய மனப்பான்மையுடன், அனைவருக்கும் பயன்படவேண்டும் என்ற நோக்கத்துடன் அரையணு விலையில் கிடைக்கக் கூடிய முறையில் தயாரித்திருந்தால் பாராட்டியிருப்பேன். அன்றுடம் ஐந்தணுக்கூடக் கூலி கிடைக்காமல் உழைக்கும் ஏழைகள் இதை எப்படி வாங்குவார்கள்?" என்றுர் பாபு.

காகா சாகேப், கவர்ச்சிகரமான முறையில் தயாரித்துப் பிரசுரிப்பதில்தான் கவனம் செலுத்தினுர் ஏழை மக்களுடைய பொருளாதார நிலையைக் காந்திஜி சுட்டிக்காட்டிய பிறகு, வர்ணங்கள் இல்லாமல், சாதாரண படங்களுடன் மலிவுப் பிரசுரம் ஒன்றை ஓரணு அடக்க விலையில் தயாரித்தார். அதற்கும் நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஆயினும் அந்தச் செய்தியைக் காந்திஜியிடம் கூறக் காகா சகேப் தயங்கினுர்.

--திரட்டியது: ஜம்புநாதன்

...வு செலவுத் திட்டத்தில் பிரதம மந்திரியின் இலாகாவுக்கு பணவொதுக்கப் பிரேரணைமீது கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் பேசியதின் ஒரு பகுதி நேற்று வெளியாயிற்று. அதன் மிகுதிப் பகுதி இது.

### கட்டாய நாடுகடத்தல்

அகலவத்தைப்பிரதிநிதிஒரு விடயத்தைப்பற்றிக் கூறினுர். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையிலே இது மிகவும் பிரதானமானதாகும். ஏனென்றுல் ஆளும் கட்சியிலிருக்கின்ற அமைச்சர் மட்டும் கூறவில்லை, எதிர்க் கட்சியிலேயிருக்கின்ற சிறந்த சட்ட நிபுணரான அகலவத்தைப் பிரதிநிதி கூட ஸ்ரீமாவோ - சாஸ்திரி உடன் படிக்கையின் படி இங்கே ஆக்கப்பட்டசட்டத்திலே நாடுகடத்தல் இல்லையென்று கூறியிருக்கின்றுர், எங்களுக்கெதிராக சிலரால் கட்டிவிடப்பட்ட பொய்யுரை என்னவென்றுல் நாங்கள் கட்டாய நாடுகடத்தலுக்கு உடன்பட்டோம்என்பதுதான். நாங்கள் கௌரவ டட்லிசேனநாயகா அவர்களின் அரசாங்கத்துக்கு மலைநாட்டுத் தமிழரை விற்றுவிட்டோம், நாங்கள் முன்பு மலைநாட்டுத் தமிழர்களுக்காகப் பேசினேம் இன்று அவர்களை விற்றுவிட்டோமென்று சொல்லுகின்ற பொய்யுரைக்கு அகலவத்தைப் பிரதிநிதி இச்சபையிலே நல்லமுறையிலே பதில் கூறியிருக்கிறுர். எனவே பொய்யை இன்னும் விற்று விற்றுப் பிழைக்காமல் இருக்கும்படி எங்களுக்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்கின்றவர்களை நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறேம்.

அடுத்ததாக, அகலவத்தைப் பிரதிநிதி காணி பதிதலைப்பற்றியும் இங்கே சில வழிவகைகளைக் கூறினுர் ஆனுல், அந்த வழிவகைகள் கூட, இதிலேசம்பந்தப்பட்ட சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் என்றமுறையில் தம்முடைய காணிகளை உடனடியாகப் பதியவேண்டிய வாய்ப்புக்களைவிரைவிலே கொடுக்காது என்பது என்னுடைய கருத்து அவர்களிடத்திலேயிருக்கின்ற சில பத்திரங்களை ஆதாரமாகக்கொண்டு உணவுப் பங்கீட்டுப் புத்தகங்கள், வாக்காளர் இடாப்புகள்முதலியவற்றையெல்லாம் ஆதாரமாகக்கொண்டு இந்த நாட்டுக் குடிமக்களுக்கு விசேடமாகத் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் காணிகளைவிரைவிலே பதிவுசெய்து கொள்ளவேண்டிய வாய்ப்பைக் கொடுக்க அரசாங்கம் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத் தலைவர்களைப் பற்றியும்நான் கூறவேண்டும் அவர்கள் உண்மையிலேயே மிகவும் கஷ்டமான ஒரு பதவியை வகிக்கிறுர்கள் என்னைப் பொறுத்தவரையிலே என்னுடைய தொகுதியில் நான் பாராளுமன்ற உறுப்பினராக வந்த காலத்திலே ஏறக்குறைய 2,000 க்கு மேற்பட்ட நாடற்றவர்கள் இருந்தார்கள் இவர்கள் அந்த நேரத்திலே - நான் பாராளுமன்றஉறுப்பினுக வந்த அந்தக் காலத்திலே பயந்துவீதிக்குவரமாட்டார்கள். சந்தைக்குவர மாட்டார்கள்; கடைகளுக்கு வர மாட்டார்கள் இவர்களில் கள்ளத்தோணிகள் என்ப் படுபவர்கள் யாராவதுசிலர் இருக்கலாம். ஆனுல் நூற்றுக்குத் தொண்ணூற்றென்பது வீதமானவர்கள் நாடற்றவர்கள் 1949ம் ஆண்டிலே முன்னும் பின்னும் கிளிநொச்சித் தொகுதிக்குப் போய் உணவு உற்பத்தியில் ஈடுபட்டிருந்தவர்கள் இவர்களுக்கு அந்தக்காலத்திலே என்ன நடந்தது? இவர்கள் வெளியே வந்தால் உடனே வழியிலே, தெருவிலே பொலிசார் பிடித்துக் கொண்டு போவார்கள். அங்கே தரகர்கள் இருப்பார்கள். பணம் வாங்குவார்கள்; விடுவார்கள்; திரும்பப் பிடிப்பார்கள். இதனை நான் குடிவரவு குடியகல்வு திணைக்களக் கட்டுப்பாட்டாளருக்கும் பிரதம அமைச்சருக்கும் பொலிஸ் தலைவருக்கும் எடுத்து விளக்கியதன் பயனுக இன்று கைக்கூலி ஒழிந்துவிட்டது. இன்று அந்த மக்கள் நல்ல முறையிலே வாழத்தக்கதாக இருக்கிறது. இன்று நாடற்றவர்கள்மீது பகைமை கொண்டவர்கள் அவர்களை காட்டிக் கொடுத்தாலும், அரசாங்கம் அவர்களைத் துன்புறுத்துதல் குறைந்திருக்கிறது. அதற்காக நான் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்களுக்கும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களக் கட்டுப்பாட்டாளருக்கும், பொலிஸ் தலைமை அதிபருக்கும் இந்தச் சபையிலே நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டவனுக இருக்கிறேன். ஏனெனில் நாங்...

உணர்ந்து அவர்கள் நடந்திருக்கிறுர்கள்.

ஒருகாலத்திலே அமைச்சரொருவர் எனது தொகுதிக்கு வந்தபொழுது என்னுடைய காணியிலே சில கள்ளக் குடியேற்றக்காரர்கள் இருக்கிறுர்கள் என்று தாம் அறிவதாக எனக்குச் சொன்னுர். அப்பொழுது நான் அவருக்கு "எனக்கு இங்கே காணியும் இல்லை; கள்ளக் குடியேற்றக்காரர்கள்வேலைசெய்யவும்இல்லை" என்று சொன்னேன்" இப்படியாகக் கதை கட்டிவிட்டாலும், இப்பொழுதுநாடற்ற மக்களுக்கு அதிகமாக அநியாயம் நடைபெறுமலிருப்பதனுலே அரசாங்க உத்தியோகத்தர்கள் நான் சொல்வதிலுள்ள நேர்மையை உணர்ந்து, உண்மையைஉணர்ந்து நடக்கிறுர்கள என்று சொல்வதற்கு நான் பின் நிற்கவில்லை.

### பொலிசார் கஷ்டம்

என்னுடைய தொகுதியிலே இருக்கும் பொலிஸ் நிலையத்திலே பொலிஸ்காரர்கள் தங்கி வாழ்கிற இடங்கள் இவர்களுடைய விடுதிகள்—போதிய அளவு சிறப்பாக அமையவில்லை அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறுர்கள, கிளிநொச்சித் தொகுதி குடியேற்றத் திட்டத்தைச் சேர்ந்த இடமாதலால் வீடுகளும் எடுக்க இயலாது. ஆதலால். அவர்கள அங்கே வாழ்வதற்கு வேண்டிய வசதியைப் பிரதமர் செய்து கொடுக்கவேண்டும்.

இப்படியாகப் பலதுறைகளிலே நாங்கள சொன்ன குறைகளையெல்லாம் கேட்டுச் சில திருத்தங்கள செய்யப்பட்டாலும் தமிழ்பகுதிகளிலேயுள்ள பொலிஸ்உத்தியோகத்தர்கள் பிரதானமாக பொலிஸ்கான்ஸ்டபிள்கள் தமிழிலே முறையிடுபவர்களுடைய பதிவைத் தமிழிலே செய்யாமல் இருப்பதாகவும் —சிலவேளைகளில் செய்தாலும் அவை திருத்தமாக இல்லாமலிருப்பதனுலும் — தமிழ்ப்பகுதியிலேயுள்ள மக்கள் விரக்தியடைந்திருக்கிறுர்கள். சொந்தப் பகுதியிலோ, சொந்தமாகாணத்திலோ பொலிஸ்கான்ஸடபிள்கள் வேலைகள் செய்யக்கூடாது என்று ஒரு பிரமாணம் இருப்பதினுலேயே தமிழர்கள் தமிழ்தெரிந்த பொலிஸ்காரர்கள் தமிழ்ப் பகுதிகளில் இல்லாமல் மாற்றப்படுகிறுர்கள் என்று கூறப்படுகின்றது

இதை மாற்றியமைத்து தமிழ்ப்பகுதிகளுக்குத் தமிழ் தெரிந்தவர்களை அனுப்புங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நாங்கள் சிங்களப் பொலிஸ்காரர்களை அனுப்ப வேண்டம் என்று சொல்லவில்லை தமிழ் தெரிந்தவர்களை அனுப்புங்கள் என்று தான் கேட்கிறேம். சிங்களப் பொலிஸ்காரர்கள் தமிழ்த் தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடைந்தால் அவர்களுக்கு இரண்டு அல்லது மூன்று சம்பளஉயர்வுகளைக்கொடுங்கள். இந்த முறையில் செய்தால்தான் தமிழ்ப்பகுதிகளிலே தமிழிலே காரியத்தைச் செய்யக் கூடிய முறையிலே பொலிசாரை நீங்கள் அங்கே அனுப்ப முடியும் என்பதைக்கூறி எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

## ...ராலி வடக்கு விரைவில் ஒளிமயமாகும்

அராலி, வெள்ளி

நாட்டிலுள்ள 500 கிராமங்களுக்கு மின்சக்தி வசதிகள் கிடைக்கவிருக்கும் கிராமங்களில் அராலிக்கிராமமும் ஒன்று. அராலிக் கிராமம் மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுஅராலி மேற்குக்கு 56,325 ரூபாவும், அராலி தெற்குக்கு 86,000 ரூபாவும். அராலி வடக்குக்கு 83,000ரூபாவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பல கிராமங்கள் சேர்க்கப்பட்டிருப்பதால், கிராமங்கள் அவைகளின்தேவையின் அளவைப் பொறுத்தும், மின் தொடர்பு இணைப்புகளுக்குத் தேவையான இறக்குமதிப் பொருட்களி னிருப்பைப் பொறுத்தும் 'அமைச்சினுல் வரிசைக்கிரமப்படுத்தப்பட்டுள்ளன. அராலி வடக்கு முக்கியத்துவ வரிசையிலிருப்பதால் அப்பகுதி விரைவில் ஒழிமயமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறு நீரபபாசன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாட்டுச் சொந்தக்காரர்களுக்கு கொடுக்க வசதியளிக்கு முகமாக அவர்கள் மீது வழக்குத் தொடர வேண்டும் என்றும் கூறினுர்.

அடுத்து கிருஷிக இலாகா உப ஆணையாளர் திரு. கே. சபாரத்தினம், தென்மராட்சி காரியாதிகாரி திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, ஆகியோரும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினுர்.

## சங்காபிஷேகம்

மண்டைதீவு, சனி

மண்டைதீவு திருவெண்காட்டுசித்திவிநாயகர் ஆலய வருடாந்த சங்காபிஷேக மகோற்சவம் பிரம்மஸ்ரீ சுப்பிரமணியசர்மா குருக்களின் தலைமையில் நடைபெற்றது, இதைத்தொடர்ந்து திரு நாராயணசாமி, லிங்கம் சகோதரர்களின் இசைநிகழ்ச்சியும், மேளக்கச்சேரியும் விநாயகப் பெருமானின் திருஊர்வலக் காட்சியும் நடைபெற்றன.

## வெங்காய ஏற்றுமதிக்கு வசதி போதாதாம்

அராலி, சனி

வெங்காய ஏற்றுமதி செய்யும் கூட்டுறவுச் சங்கங்களின்பிரதி நிதிகள்வெங்காய ஏற்றுமதிக்கனா வசதிகளைச் செய்துதருமாறு கோரும் மகஜர் ஒன்றை வடபகுதி ஐக்கிய மேர்ப்பார்வைச் சபைத் தலைவருக்கு அனுப்பியுள்ளனர்.

சுன்னுகப்புகையிரத ஸ்தானத்திற்கு வெங்காயம் ஏற்றுமதி செய்யச் செல்லும் கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் பலமணிநேரம் காத்து நிற்கவேண்டிய நிலை ஏற்படுவதுமட்டுமன்றி வெங்காயமும் பாதுகாப்பாக வைப்பதற்கு ஷெட் முதலிய இடவசதியின்றி வெய்யில்மழையாகியவற்றுல் பாதிக்கவேண்டியிருப்பதாலுமே மேற்படி பிரதிநிதிகள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது,

## திருமண அழைப்பு

திரு சி. சிவபாதசுந்தரம் (உள்ளூர் ஆட்சி அமைச்சு கொழும்பு) அவர்களுக்கும் அகிலேஸ்வரி தம்பு அவர்களுக்கும் 8-9-69ம் திகதி திங்கட்கிழமை, காலை 9 மணிக்கும் 11 மணிக்கும் இடையில்வரும் சுபமுகூர்த்தத்தில் இந்து சமய முறைப்படி வரணி சிறீ சீவப்பிட்டி கந்தசாமி கோவிலில் திருமணம்நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ்கள்அனுப்பவில்லை. சி. சிவபாதசுந்தரம், இடைக்குறிச்சி வரணி.

1383

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org